




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








புதன் ❖ ஜனவரி. 10, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 97 ❖ ரூ.10


## வேலைநிறுத்தம்; மாநிலம் முழுவதும் 95.6% பேருந்துகள் இயக்கம்

# அரசு தகவல்

## இயக்கப்பட வேண்டிய 17,302 பேருந்துகளில் 16,547 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன : தமிழக அரசு

சென்னை , ஜன. 10–

போக்குவரத்து தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கியுள்ள நிலையில், 'தமிழகம் முழுவதும் இயக்கப்பட வேண்டிய 17,302 பேருந்துகளில் 16,547 பேருந்துகள், அதாவது 95.6% பேருந்துள் இயக்கப்பட்டுள்ளன' என்று தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக முதல்வரின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பொதுமக்கள் அச்சமில்லாமல் பயணம் செய்ய ஏதுவாக உள்ளூர் மற்றும் வெளியூர் செல்லும் பேருந்துகள் அனைத்து வழித்தடங்களிலும் முழுமையாக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பேருந்துகள் இயக்கம் தொடர்பாக கோயம்பேடு, கிளாம்பாக்கம் மற்றும் விழுப்புரம் பேருந்து நிலையத்தில் நேரடியாக ஆய்வு செய்தேன். மேலும், பேருந்தில் பயணிக்கும் பயணிகளிடம் பயண விவரம் குறித்து கேட்டறிந்தேன்.

நேற்று மாலை 4 மணி நிலவரப்படி, மாநகரப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்பட வேண்டிய 3,233 பேருந்துகளில் 3,072 பேருந்துகள், அதாவது 95.02% பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்பட வேண்டிய 303 பேருந்துகளில் 303 பேருந்துகள், அதாவது 100% பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

இதேபோல், விழுப்புரத்தில் இருந்து இயக்கப்பட வேண்டிய 2,828 பேருந்துகளில் 2,580 பேருந்துகளும், சேலத்தில் இருந்து இயக்கப்பட வேண்டிய 1,556 பேருந்துகளில் 1,547 பேருந்துகளும், கோவையில் இருந்து இயக்கப்பட வேண்டிய 2,461 பேருந்துகளில் 2,311 பேருந்துகளும், கும்பகோணத்தில் இருந்து இயக்கப்பட வேண்டிய 3,095 பேருந்துகளில் 2,957 பேருந்துகளும், மதுரையில் இருந்து இயக்கப்பட வேண்டிய 2,166 பேருந்துகளில் 2,132 பேருந்துகளும், திருநெல்வேலியில் இருந்து இயக்கப்பட வேண்டிய 1,660 பேருந்துகளில் 1,645 பேருந்துகளும் என மொத்தமாக இயக்கப்பட வேண்டிய 17,302 பேருந்துகளில் 16,547 பேருந்துகள், அதாவது 95.6% பேருந்துள் இயக்கப்பட்டுள்ளன.

எனவே, பயணிகள் எந்தவித அச்சமின்றி, பாதுகாப்புடன் பயணம் மேற்கொள்ள அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர்கள், நடத்துனர்கள் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். பேருந்துகள் இயக்கத்தினை அனைத்து போக்குவரத்துக் கழக பணியாளர்கள் முழுமையாக கண்காணித்து பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று அவர் கூறியுள்ளார்.

போக்குவரத்து தொழிற்சங்கங்களின் நீண்ட கால கோரிக்கைகளான 6 அம்ச கோரிக்கைகளில் ஒன்றைக் கூட ஏற்க மறுக்கும் தமிழக அரசின் மெத்தனப் போக்கை கண்டித்து நேற்று முதல் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என போக்குவரத்து தொழிற்சங்கங்கள் அறிவித்தன. அதன்படி நேற்று காலை போராட்டம் தொடங்கியது. இதனால், ஓரளவு மட்டுமே பாதிப்பு இருப்பது அமைச்சரின் அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.

## அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் 1000 ரூபாய் பொங்கல் பரிசு : முதல்வரின் அசத்தல் அறிவிப்பு

சென்னை, ஜன. 10–

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



பொங்கல் பண்டிகையையொட்டி 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும் என்று கடந்த 2-ம் தேதி தமிழக அரசு அறிவித்தது. மேலும், முன்கூட்டியே திட்டமிட்டு உற்பத்தி செய்த காரணத்தால், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி–சேலைகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பொங்கல் பரிசுத்தொகுப்புடன் சேர்த்து, இவற்றை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், பொங்கல் திருநாளைச் சிறப்பாக மக்கள் கொண்டாட, மத்திய, மாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து, ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.1,000 பொங்கல் பரிசாக நியாயவிலைக் கடைகளில் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக ரொக்கமாக வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்பு அறிவித்திருந்தார்.

தமிழக அரசு சார்பில் கடந்தாண்டு வரை 2.19 கோடி அரிசி குடும்ப அட்டைகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்ட நிலையில், தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளால் 1000 ரூபாய் கிடைக்காததை அறிந்த சர்க்கரை அட்டைதாரர்கள் கடும் கோபம் கொண்டு ரேஷன் கடைகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசாக 1000 ரூபாய் வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் நேற்று அறிவித்துள்ளார். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நிபந்தனையின்றி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று முதல்வர் தெரிவித்துள்ளார். பலருக்கு பரிசு தொகைக்கான டோக்கன் மறுக்கப்பட்ட நிலையில் முதல்வர் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகள்

## மாரத்தான் போட்டியினை புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் துவக்கி வைத்தார்

புதுக்கோட்டை , ஜன. 10–



புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கில், கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுபோட்டிகள் 2023 முன்னிட்டு, விழிப்புணர்வு மாரத்தான் போட்டியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவிகள், விளையாட்டு வீரர்களின் நலனிற்காக எண்ணற்றத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் வருங்கால இந்தியாவின் விளையாட்டின் தலைநகரமாக தமிழ்நாடு திகழும்வகையில் பல்வேறு பன்னாட்டு அளவிலான போட்டிகள் (செஸ் ஒலிம்பியாட், ஆசிய ஆடவர் வளைகோல் போட்டிகள்) தேசிய அளவிலான போட்டிகள், மாநில அளவிலான போட்டிகள் (முதலமைச்சர் கோப்பை -2023 Tamilnadu All India Central Services Badminton -2023) நடத்திவருவது விளையாட்டு வீரர்களிடையே நல்ல எதிர்காலத்தை உருவாக்கியுள்ளது. அவ்வகையில் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் தமிழ்நாட்டில் முதன் முறையாக நடத்தப்படுவது நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளும் நிகழ்வாகும்.

2023 ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து 19.01.2024 முதல் 31.01.2024 வரை சென்னை, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி நகரங்களில் நடத்தப்பட உள்ளது. இந்த போட்டியில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து 18 வயதிற்கு கீழ் உள்ள 5,500 -க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் இந்த போட்டியினை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சார விழிப்புணர்வு வாகனம் கன்னியாகுமரி முதல் சென்னை வரை அனைத்து மாவட்டங்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக செல்ல உள்ளது. நமது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பிரச்சார விழிப்புணர்வு வாகனம் இன்று வருகை தந்துள்ளது. அதன்படி, இன்றையதினம் 250 விளையாட்டு வீரர்களுடன் நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் போட்டி துவக்கி வைக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு மாரத்தான், மாவட்ட விளையாட்டரங்க வளாகம் துவங்கி, இரயில் நிலையம் ரவுண்டானா, மாலையீடு, டிவிஸ், மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி சாலை, அண்ணாசிலை, நகராட்சி சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலக ரவுண்டானா வழியாக மீண்டும் மாவட்ட விளையாட்டரங்க வளாகம் வந்தடைந்தது. மேலும் இப்போட்டியின் லோகோ, சின்னம், கருத்துரு பாடலும் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

எனவே மாணவ, மாணவிகள் விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கி, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார், புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் ஷியாமளா, வட்டாட்சியர் கவியரசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## தருமபுரி மக்களை தேசிய அளவில் அவமானப்படுத்தும் செந்தில் குமார் எம்.பி. – அண்ணாமலை குற்றச்சாட்டு

தருமபுரி : ஜன. 10,

தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கி உள்ளது. ஆனால், இது குறித்த எந்தக் கவலையும் இல்லாமல் வட மாநில மக்களை அவதூறாகப் பேசி, மன்னிப்புக் கேட்டு தருமபுரி மக்களை தேசிய அளவில் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார் செந்தில்குமார் எம்பி என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டி இருக்கிறார்.



பாஜக தலைவர் அண்ணாமலை தனது 'என் மண் என் மக்கள்' யாத்திரையை தற்போது தருமபுரி மாவட்டத்தில் மேற்கொண்டு வருகிறார். இதனிடையே, அந்த மாவட்டத்தின் நிலை குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் தொகுதியின் திமுக எம்பி–யான செந்தில்குமாரை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

அதில், 'பின்தங்கிய மாநிலம் என்று திமுகவினர் கூறும் பீகாரின் பல மாவட்டங்களை விட, தருமபுரி பின்தங்கி உள்ளது. ஆனால், இது குறித்த எந்தக் கவலையும் இன்றி, வட மாநில மக்களை அவதூறாகப் பேசி, மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கிறார் தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார். இதன்மூலம் அவர் தருமபுரி மக்களை தேசிய அளவில் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இத்தனை ஆண்டுகளாகக் காத்திருந்த தருமபுரி மக்கள், பெரும் அரசியல் மாற்றத்திற்குத் தயாராகி விட்டார்கள் என்பதை கூடியிருக்கும் மக்களின் எழுச்சி ஆரவாரத்தில் உணர முடிகிறது. வரும் பாராளுமன்றத் தேர்தலில், தமிழகம் முழுவதும் பாரதப்பிரதமர் நரேந்திரமோடி கரங்களை வலுப்படுத்த வாக்களிக்க வேண்டும். மக்கள் விரோத திமுக கூட்டணியை முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும்' என குறிப்பிட்டுள்ளார் அண்ணாமலை.

## அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு நீதிமன்றம் தீர்ப்பு தேதியை அறிவித்தது

சென்னை, ஜன. 10–

அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு மீது வரும் 12ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி அறிவித்துள்ளார்.

சட்டவிரோத பணப்பரிமாற்றதடைச்சட்ட வழக்கில் அமலாக்கத் துறையால், அமைச்சர் செந்தில் பாலாஜி, கடந்த ஆண்டு ஜூன் 14-ம் தேதி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் ஆகஸ்ட் 12-ம் தேதி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சுமார் 3 ஆயிரம் பக்கம் கொண்ட குற்றப்பத்திரிக்கையை அமலாக்கத் துறையினர் தாக்கல் செய்திருந்தனர்.

ஜாமீன் கோரி அமைச்சர் செந்தில் பாலாஜி ஏற்கெனவே இரண்டு முறை தாக்கல் செய்த மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது. இந்நிலையில், மூன்றாவது முறையாக ஜாமீன் கோரி செந்தில் பாலாஜி சார்பில் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.



இந்த மனு நீதிபதி எஸ்.அல்லி முன் நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை விசாரணைக்கு வந்த போது, அமலாக்கத் துறை தரப்பில் மூத்த வழக்கறிஞர் வருவதற்காக விசாரணையை சிறிது நேரத்திற்கு தள்ளிவைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. அப்போது கோபமடைந்த நீதிபதி, ஏற்கெனவே இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டும் இதுவரை தாக்கல் செய்யவில்லை. பதில் மனு தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் எதற்காக வழக்கு தொடருகிறீர்கள் என்று அமலாக்கத் துறைக்கு கேள்வி எழுப்பினார்.

பின்னர் வழக்கில் அமலாக்கத் துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கபட்டது. மாநில காவல்துறை ஒரு நாளைக்கு 120 ஜாமீன் வழக்கில் பதில் தாக்கல் செய்யும் நிலையில், ஒரு வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய கூறும் காரணம் ஏற்கும் படியில்லை என நீதிபதி அதிருப்தி தெரிவித்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில் இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி, டிசம்பர் 12ம் தேதி இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் முருகேசன் தலைமையில் நேற்று மாவட்ட வர்த்தக கழக கட்டிடத்தில் பொங்கல் விழா நடைபெற்றது இதில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்வில் திருச்சி பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பெனட் அந்தோணி ராஜ், மாநில, மாவட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் வழக்கறிஞர் சந்திரசேகரன், ராமசுப்புராம், இப்ரஹிம் பாபு, சூர்யா பழனியப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"நீங்கள் எங்கிருந்தாலும், எத்தகைய சூழ்நிலைக்கு வெளிப்படுத்தப்பட்டாலும், ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்தும் நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள். வாழ்வனுபவம் வீண்போக விடாதீர்கள்."




## லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தர அரும்பணி ஆற்றும் முதல்வருக்கு என் அன்பான பாராட்டுகள் : வைகோ நெகிழ்ச்சி

சென்னை : ஜன. 10, முதலீட்டாளர் மாநாடு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக அமைந்துள்ளதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார். லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத்தர பணியாற்றும் முதல்வருக்கு பாராட்டுக்கள் என்றும் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி உள்ளது. சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற இம்மாநாட்டின் நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் "உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன் எப்போதும் இல்லாத அளவாக 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் என்பதை இந்தியாவே உற்று நோக்கும் இந்த அவையில் பெரு மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன் என்றும், இந்த முதலீடுகள் மூலம் நேரடி மற்றும் மறைமுகமாக மொத்தம் 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 வேலை



வாய்ப்புகள் உருவாக்கப்படும்" என்றும் குறிப்பிட்டது நம் அனைவருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

சிங்கப்பூர், ஜப்பான், ஐக்கிய அரபு நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளுக்கும் முதல்வர் அவர்கள் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள பெரும் சாதனை இது என்பது குறிப்பிடத்தக்கது. 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திட நம் முதல்வர் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளதையும் இந்த நேரத்தில் எண்ணி தமிழகம் பெருமை கொள்கிறது. உலக நாடுகளை உள்ளடக்கிய இந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் தமிழ்நாட்டு அரசுடன் பங்குதாரர் நாடுகளாக இணைந்துள்ளன. மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார நிறுவனங்களும் மாநாட்டில் இணைந்து செயல்பட்டு இருக்கின்றன. தலைமைத்துவம், நீடித்த நிலைத்தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய கருப்பொருள்களில் இந்த மாநாடு நடத்தப்பட்டு இருக்கிறது. 8 ஆயிரம் சதுர அடியில் அமைக்கப்பட்ட இந்த மாநாட்டில், 300 முதலீட்டாளர்கள், 50க்கும் மேற்பட்ட அமர்வுகளில் விவாதித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக சிறந்த முடிவுகளை எடுத்துள்ளார்கள்.

"தெற்காசியாவின் முதன்மை மாநிலமாக உயர்ந்துவரும் தமிழ்நாடுதான் உலக முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்பதே நமது நிலையான செய்தியாக இருந்து வருகிறது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகவலைதளத்தில் பதிவு செய்துள்ள செய்தி நம் அனைவரையும் பெருமிதம் பொங்கச் செய்கிறது. திராவிட மாடல் அரசினை திறம்பட வழிநடத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின் இச்சாதனை தமிழ்நாட்டு வரலாற்றில் வைர எழுத்துக்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும். தொழில் வளர்ச்சியின் மூலம் பொருளாதார நிறைவு காணவும், இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தரவும், நாட்டை வலுவான பாதைக்கு அழைத்துச் செல்லவும் அரும்பணி ஆற்றிவரும் தமிழ்நாடு முதல்வருக்கு என் அன்பான பாராட்டுகள், வாழ்த்துகள் என்று வைகோ குறிப்பிட்டுள்ளார்

## வாசுதேவநல்லூரில் சமத்துவ பொங்கல் வைத்து கழக நிர்வாகிகள் கொண்டாட்டம்

வாசுதேவநல்லூர் : ஜன. 10, தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் காலனியில் சமத்துவ பொங்கல் திருநாள் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில், தென்காசி எம்பி தனுஷ் எம் குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் முன்னிலையில் சமத்துவ பொங்கல் திருநாள் நடைபெற்றது.



பொங்கல் திருநாளில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் சமத்துவ பொங்கலிட்டு இத்திருநாளை கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் யுஎஸ். டிசீனிவாசன், மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் சு.செ. செண்பக விநாயகம், முத்துக்குமார், மணிகண்டன், மாவட்டத் துணைச் செயலாளர் மனோகரன், பேரூராட்சி மன்ற தலைவி லாவண்யா, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு அமைப்பாளர் பிச்சையா, பேரூர் கழகச் செயலாளர் ரூபி பாலசுப்பிரமணியம், புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி, பூஜை பாண்டியன், கே.டி.சி.குருசாமி, சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் விஜயா பாண்டியன், மாணவரணி துணை அமைப்பாளர் விக்ரம் மணிகண்டன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேதுராமன், ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் அன்பு ராஜன், முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் சரவணன், இராமர் இ.பி, கட்டபொம்மன், தகவல் தொழில் நுட்ப அணி கிப்ட்சன், வழக்கறிஞர் அணி பிரிவு குகன், பேராசிரியர் செல்லத்துரை, மகேஷ் சர்தார், கார்த்திக் ,ஜேகே ஆகியோர் கலந்து கொண்டு சமத்துவ பொங்கலை கொண்டாடி வழிபட்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக அன்னதானமும் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.




## போக்குவரத்துத் தொழிலாளர்கள் பிரச்சினை தீர ஹெச்.ராஜா புது யோசனை

சென்னை : ஜன. 10, தமிழக அமைச்சர்களில் ஒருவரின் சொத்தை விற்றால் போக்குவரத்துத் தொழிலாளர் பிரச்சினையை எளிதாக தீர்த்துவிடலாம் என தமிழக பாஜகவின் மூத்த தலைவர் ஹெச்.ராஜா வேடிக்கையாக தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றிய ஓய்வூதியர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்த வேண்டும். பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அரசு போக்குவரத்துக் கழகங்களின் வரவுக்கும் செலவுக்குமான வித்தியாசத் தொகையை பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, சிஐடியு, ஏஐடியுசி, அண்ணா தொழிற்சங்க பேரவை, ஐஎன்டியுசி, டிடிஎஸ்எஃப், பிஎம்எஸ் உள்ளிட்ட போக்குவரத்து தொழிற் சங்கங்த்தினர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழகம் முழுவதுமே பொதுப் போக்குவரத்து சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய ஹெச்.ராஜா, "போக்குவரத்து



ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் மக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு போராட்டம் மேலும் தொடராமல் பார்க்க வேண்டும். தமிழகத்தில் அடுத்த சில மாதங்களில், ஊழியர்களுக்கு சம்பளம் போட முடியுமா என்ற சந்தேகமே எழுந்துள்ளது. அந்த அளவுக்கு நிர்வாக சீர்கேடுகள் நடந்துகொண்டிருக்கிறது.

எட்டு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் தமிழக அரசுக்கு கடன் இருக்கிறது. இதை சமாளிக்க நான் ஒரு ஐடியா சொல்கிறேன். அமலாக்கத்துறை விசாரணையில் இருக்கும் அமைச்சர்களின் சொத்துக்களை ஏலம் விட்டால் இந்த மொத்த கடனையும் அடைத்து விடலாம். மேலும், போக்குவரத்து தொழிலாளர்கள் உள்ளிட்ட எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது" என்றார்.

### புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி

## அகில இந்திய அளவில் எஸ்ஆர்எம்யூ சார்பில் திருச்சியில் தொடர் உண்ணாவிரத போராட்டம்

திருச்சி , ஜன. 10–

திருச்சியில் டிஆர்எம் அலுவலக முன்பு ஏஜிஎஸ், எஸ்ஆர்எம்யூ தொழிற்சங்கத்தின் கோட்ட செயலாளர் வீரகேசவன் தலைமையில் பழைய ஓய்வூதி திட்டத்தை முழுமையாக பெற்றிட வேண்டும் என வலியுறுத்தி அகில இந்திய அளவில் எஸ்ஆர்எம்யூ சார்பில் உண்ணாவிரத போராட்டம் திங்கள் கிழமை 8ம் தேதி தொடங்கியது. இப்போராட்டம் 11ம் தேதி நாளை வரை நடைப்பெற உள்ளது.



ஓய்வூதியத்தை பொறுத்தவரையில் உச்சநீதிமன்ற தீர்ப்புகளை சுட்டிகாட்டி வரும் எஸ்ஆர்எம்யூ ஓய்வூதியம் என்பது அரசாங்கம் தரும் கொடை அல்ல இது காலம் தாழ்த்தி தரப்படும் ஊதியம் என்று அரசியல் சட்டத்தின் விதியின் அடிப்படை உரிமை என்பதை நிர்ணயித்து இருக்கிறது. எனவே கடந்த காலங்களில் 2004 க்கு பிறகு நடந்த எந்த ஆர்ப்பாட்டம் ஆனாலும் பழைய பென்ஷன் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையையும் சேர்த்து எண்ணற்ற போராட்டங்களில் போராடினாலும் மத்திய அரசு அதனை ஏற்க மறுத்ததன் விளைவாக கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மிகப் பெரிய கையெழுத்து இயக்கத்தை ரயில்வே தொழிலாளர்கள் மத்தியில் நடத்தி என்பிஎஸ் ரத்து செய்யக்கோரி குடியரசுத் தலைவருக்கு கோரிக்கை கோரிக்கை அனுப்பப்பட்டது.

இருப்பினும் இதற்கு மத்திய அரசு செவி சாய்க்காததால் அரசை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடந்து வருகின்றது. இதில் தொழிற்சங்கத்தை சேர்ந்த ஏராளமானோர் குடும்பத்துடன் பங்கேற்றுள்ளனர்.

## புனல்குளம் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் நாளை மின் விநியோகம் நிறுத்தம்

புனல்குளம் : ஜன. 10, நாளை 110/33-11 கி.வோ. புனல்குளம் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் இந்த துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் புனல்குளம், தெத்துவாசல்பட்டி, மஞ்சப்பேட்டை, தச்சங்குறிச்சி, விராலிப்பட்டி, நத்தமாடிப்பட்டி, சோழகம்பட்டி, நொடியூர், சமுத்திரப்பட்டி, கொத்தம்பட்டி,



அரியாணிப்பட்டி, காடவராயன்பட்டி, புதுநகர், முதுகுளம் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் 33/11கி.வோ. குளத்தூர் நாயக்கர்பட்டி துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் குளத்தூர் நாயக்கர்பட்டி, நடுப்பட்டி, சேவியர்குடிகாடு, ஆத்தங்கரைப்பட்டி, கீராத்தூர், பருக்கைவிடுதி, குளத்தூர், மூக்கப்புடையான் பள்ளம் ஆகிய பகுதிகளுக்கும் காலை 09:00 மணி முதல் மதியம் 04:00 மணி வரை மின் விநியோகம் இருக்காது என உதவி செயற்பொறியாளர்/பராமரிப்பு/புனல்குளம் வில்சன் அறிவித்துள்ளார்.

## ஹரியாணாவில் சோனிபட் அருகே பனிமூட்டம் காரணமாக விபத்து : காவல் ஆய்வாளர்கள் இருவர் பலி

புதுடெல்லி, ஜன. 10–

ஹரியாணா மாநிலம் சோனிபட் மாவட்டம் குண்டலி எல்லை அருகே லாரி மீது கார் மோதிய விபத்தில் டெல்லியைச் சேர்ந்த இரண்டு போலீஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு 11.30 மணிக்கு நடந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.



விபத்தில் உயிரிழந்தவர்கள் வடமேற்கு மாவட்டத்தில் சிறப்பு பணிக்காக அமர்த்தப்பட்ட ஆய்வாளர் தினேஷ் பெனிவால் மற்றும் ஆதர்ஸ் நகர் காவல்நிலையத்தில் பணியமர்த்தப்பட்ட ஏடிஓ ஆய்வாளர் ரன்வீர் ஆகியோர் என்பது தெரியவந்துள்ளது. இருவரும் காரில் சோனிபட் வீட்டுக்கு திரும்பிய போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த ஆய்வாளர்களின் உடல்கள் உடற்கூராய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஹரியாணா போலீஸார் தெரிவித்தனர். முதல்கட்ட விசாரணையில் போலீஸார் சென்ற கார் பனிமூட்டம் காரணமாக சாலையில் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.



புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட மட்டைப்பந்து சங்கம் சார்பில் நடைபெற்ற போட்டியில் மாவட்ட அளவில் வெற்றி பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தனர். ஆட்டநாயகன் விருதை 6 மாணவர்கள் வென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளியின் தாளாளர் தேனாள் சுப்பிரமணியன், முதல்வர் சிராஜுதீன் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

### பாலியல் வழக்கில் 3 ஆண்டு சிறை தண்டனைக்கு எதிரான

## மேல்முறையீட்டு வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரிய ராஜேஷ் தாஸ் மனு தள்ளுபடி

சென்னை :ஜன.10,சிறை தண்டனைக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரிய ராஜேஷ் தாஸ் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

பெண் ஐ.பி.எஸ். அதிகாரிக்கு பாலியல் தொல்லை அளித்ததாக தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் சிறப்பு டி.ஜி. பி. ராஜேஷ்தாசுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதித்து விழுப்புரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கடந்த ஜூன் 16ம் தேதி தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து ராஜேஷ் தாஸ், விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுதாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைக்க ராஜேஷ் தாஸ் அவகாசம் கேட்ட நிலையில், வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், மேல்முறையீட்டு வழக்கு விழுப்புரம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டால் நியாயம் கிடைக்காது என்று கூறி வழக்கின் விசாரணையை வேறு



நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி ராஜேஷ்தாஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த்வெங்கடேஷ், நேற்று தீர்ப்பு வழங்கினார். அதில், மனுவை விசாரிக்க எந்த முகாந்திரமும் இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்கிறோம். மேலும் வழக்கு விசாரணைக்காக ஜனவரி 12ம் தேதி விழுப்புரம் நீதிமன்றத்தில் ஆஜராக ராஜேஷ் தாஸுக்கு உத்தரவிடப்படுகிறது. ஜனவரி 18ம் தேதி இறுதி விசாரணையை துவங்கி 24ம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று விழுப்புரம் அமர்வு நீதிமன்றத்துக்கு உத்தரவிடுகிறோம்.ராஜேஷ் தாஸ் மேல்முறையீட்டு வழக்கில் விழுப்புரம் நீதிமன்றம் தீர்ப்பை அறிவிக்க தடையில்லை," என்று தெரிவித்தார்.

## வேலைக்கு நிலம் வழக்கு : லாலுவின் மனைவி ராப்ரி தேவி, மகள் மிசா பாரதி மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

புதுடெல்லி : ஜன. 10, ரயில்வே வேலைக்கு நிலம் வாங்கியது தொடர்பான வழக்கில் பிஹார் முன்னாள் முதல்வர் ராப்ரி தேவி, அவரது மகள் மிசா பாரதி பெயரில் முதல் குற்றப்பத்திரிகையை அமலாக்கத் துறை நேற்று தாக்கல் செய்தது.

இந்தக் குற்றப்பத்திரிகையில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் (ஆர்ஜேடி) தலைவர் லாலு பிரசாத் யாதவ், அவரது மகன் தேஜஸ்வி யாதவ் குடும்பத்துக்கு நெருக்கமானவராக அறியப்படும் அமித் கத்யால், சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

டெல்லியில் உள்ள பணமோசடி தடுப்பு சட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை நேற்று



இந்த குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்தது. சிறப்பு நீதிமன்றம் இவ்வழக்கு விசாரணையை ஜனவரி 16-ம் தேதி பட்டியலிட்டுள்ளது.

ரயில்வே வேலைக்கு நிலம் வாங்கியது தொடர்பான வழக்கு விசாரணையில் பணமோசடி தொடர்பாக அமித் கத்யால் நவம்பர் மாதம் அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் லாலு பிரசாத் மற்றும் அவரது மகனும், பிஹார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் இருவருக்கும் அமலாக்கத் துறை சம்மன் அனுப்பி வைத்துள்ளது.

முன்னதாக, ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ், கடந்த 2004 முதல் 2009 வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சியில் ரயில்வே அமைச்சராக இருந்தார். அப்போது இந்திய ரயில்வேயின் பல்வேறு மண்டலங்களில் 'குரூப் டி' பதவிகளுக்கு பல்வேறு நபர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு வேலை வழங்க லாலுவும் அவரது குடும்பத்தினரும் நிலங்களை லஞ்சமாகப் பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக சிபிஐயும் அமலாக்கத் துறையும் தனித்தனியே வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கறம்பக்குடி பகுதியில் குட்கா விற்பனை செய்த மூன்று கடைகளுக்கு அதிகாரிகள் சீல் வைப்பு

கறம்பக்குடி : ஜன. 10, கறம்பக்குடி பகுதியில் அரசால் தடைசெய்யப்பட்ட குட்கா விற்பனை செய்த மூன்று மளிகை கடைகளுக்கு அதிகாரிகள் கடைகளை பூட்டி சீல் வைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பகுதியில் அரசால் தடைசெய்யப்பட்ட குட்கா விற்பனை செய்வதாக அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் கறம்பக்குடி காவல் உதவி ஆய்வாளா சாமிக்கண்ணு, உணவு பாதுகாப்பு துறை அலுவலர் ரெங்கசாமி



ஆகியோர் கறம்பக்குடி பகுதிகளில் உள்ள கடைகளில் ஆய்வு செய்தனர். இதில் கறம்பக்குடி சாகுல்ஹமீது என்பவரின் மளிகை கடை, அம்புக்கோவில் அய்யப்பன் என்பவரின் மளிகை கடை, மருதன்கோன்விடுதி ரஹ்மத்துல்லா என்பவரின் மளிகை கடை ஆகிய கடைகளில் குட்கா விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக மூன்று மளிகை கடைகளுக்கும் உணவு பாதுகாப்புதுறை அலுவலா ரெங்கசாமி கடைகளை பூட்டி சீல் வைத்தார்.

# தரங்கம்பாடியில் புதிய பாலம் திறப்பு விழா எம்எல்ஏ நிவேதா முருகன் கலந்து கொண்டு திறந்து வைத்தார்



தரங்கம்பாடி, ஜன. 10–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடிபேரூராட்சிக்குட்பட்ட தரங்கம்பாடி மாணிக்க பங்கு சாலையில் புதிய பாலம் ரூ 16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை மண்டலதிமுகதகவல்தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி எம் ஸ்ரீதர், பேரூராட்சி திமுக செயலாளர் முத்துராஜா, ஒன்றிய துணைத் தலைவர் பாஸ்கர், பேரூராட்சி துணைத் தலைவர் ராஜேந்திரன், பேரூராட்சி சுகாதார ஆய்வாளர் இளங்கோவன், ஒப்பந்ததாரர் ரமேஷ், தரங்கம்பாடி வார்டு கவுன்சிலர்கள் மற்றும் மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



▶ காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி கொம்யூனுக்கு உட்பட்ட சில பகுதிகளான அருள்பிள்ளை தெரு மற்றும் தேனியர் வீதி ஆர்.பி.எம். நகர் போன்ற பகுதிகளில் மின்பற்றாக்குறை அடிக்கடி ஏற்பட்டு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்ட நிலையில் இந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் அப்பகுதிக்கு புதியதாக 23 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மின்மாற்றியினை நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திரபிரியங்கா துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மின்துறை நிர்வாகப் பொறியாளர் விமல்குமார் உதவி பொறியாளர் விஜயகுமார் மற்றும் ஜெ.இ. ஜெய்சங்கர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்த புதிய மின் மாற்றியால் சுமார் 300 குடும்பங்கள் பயன்பெறும் என மின்துறை அதிகாரி தெரிவித்தார்.

ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில்

# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ வழங்கினர்



ஊத்துக்கோட்டை, டிச10–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் மின்வாரிய அலுவலகம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், பேரூராட்சிகள் துறை, வருவாய்த்துறை,இ-சேவை மையம்,வேலைவாய்ப்பு துறை, எரிசக்தி துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை, காவல்துறை,வீட்டுவசதி நகர்புற வளர்ச்சி துறை,நகர் ஊரமைப்பு துறை,சமூக நலத்துறை,தொழில் மையம் மற்றும் தாட்கோ,இந்தியன் வங்கி,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை,வீட்டு வசதி வாரியம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பதினைந்து துறை உள்ளிட்ட 15 துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து 350 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

அப்போது எட்டிக்குளம் பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள் தாங்கள் வசித்து வரும் பகுதிக்கு பட்டா வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.இந்த மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் 30 நாட்களுக்குள் பயனாளிகளுக்கு உரிய பதிலைவழங்குவர்.நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளுக்கு, பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ஜெயகுமார் தலைமை தாங்கினார். ஊத்துக்கோட்டை தாசில்தார் வாசுதேவன், செயல் அலுவலர் சதீஷ்,திருவள்ளூர் மாவட்ட திட்ட குழு உறுப்பினரும்,பேரூர் திமுக செயலாளருமான கே.அபிராமி,பேரூராட்சி மன்ற தலைவர் அப்துல்ரஷீத், துணைத் தலைவர் ஆர். குமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பட்டா பெயர் மாற்றம்,மின் இணைப்பு,விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றங்கள், இல்லம் தேடி மருத்துவம், மருத்துவ பெட்டகம் உள்ளிட்டவைகளை பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளாக வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில், பேரூராட்சி மன்ற உறுப்பினர் கோல்டு மணி,மாவட்ட கவுன்சிலர் ராமஜெயம்,அயலக அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.ஆர். ஸ்ரீதர், விவசாய அணி சம்பத், ஆதிதிராவிடர் அணி ஏனம்பாக்கம் சம்பத்,தாராட்சி கார்த்திக் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் முடிவில், பேரூராட்சி மன்றதலைமை எழுத்தர் பங்கஜம் நன்றி கூறினார்.

# அரியலூர் மாவட்டத்தில் தொடர் வழிபறியில் ஈடுபட்ட இளைஞர் குண்டர் சட்டத்தில் கைது



அரியலூர் ஜன. 10–

அரியலூர் மாவட்டத்தில் தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட இளைஞர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இதுபற்றி அரியலூர் மாவட்ட காவல்துறை வெளியிட்ட செய்தி குறிப்பு:

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், தண்டேஸ்வரநல்லூர் பத்மாவதி நகரில் வசிக்கும் மாதவன் மகன் பிரபு (25). இவர் பல திருட்டு வழக்குகளில் ஈடுபட்டு வந்தார். கடந்த 02.12.2023–ந் தேதி பிரபுவும், அவரின் கூட்டாளிகளும் சேர்ந்து, ஜெயங்கொண்டம் அருகில் உள்ள ஆமணக்கந்தோண்டி பொன்னேரி கரையில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுவதற்கான ஆயத்தத்தில் இருந்தபோது, ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் துறையினரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட பிரபு, ஜெயங்கொண்டம் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்.

இந்நிலையில் பிரபு வெளியே வந்தால் பொது ஒழுங்கு மற்றும் பொது அமைதிக்கு பாதகமான நடவடிக்கையில் ஈடுபடுவார் என்பதால்,அவர் மீது குண்டர் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கக்கோரி, ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளர் ராமராஜன் கோரியதன் அடிப்படையில், அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ்கான் அப்துல்லா மேல் பரிந்துரையை ஏற்று, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, எதிரி மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் படி தடுப்புக்காவலில் சிறையில் அடைக்க ஆணை பிறப்பித்தார்.

அதன் அடிப்படையில் நேற்று 09.01.2024–ந் தேதி மேற்படி பிரபு " குண்டர் தடுப்பு சட்டத்தின் படி திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ தமிழகத்தில் அரசு போக்கு வரத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து வேலூரில் பயணிகள் பேருந்து சேவை தடையின்றி நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# தென்காசி நகர தமுமுக விளையாட்டு அணி சார்பில் பரிசளிப்பு நிகழ்ச்சி



தென்காசி : ஜன. 10–

தென்காசி மாவட்டம், கொடிகுறிச்சி நல்லமணி கல்லூரியில் நடைபெற்ற உலக சாதனை சிலம்பு போட்டியில் தென்காசியை சேர்ந்த மாணவ, மாணவிகளும் சிலம்பு மாஸ்டர் முஸ்தபாவும் 3 மணி 25 நொடிகள் சிலம்பம் சுற்றி சாதனை படைத்து இரண்டாம் இடத்தை பிடித்தனர்.

அவர்களை ஊக்குவிக்கும் விதமாக தென்காசி நகர தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்கள், இனிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு நகர தலைவர் அபாபில் மைதீன் தலைமை வகித்தார். தமுமுக மாநில துணை பொதுச் செயலாளர் மைதீன் சேட் கான் விருது வழங்கினார். தமுமுக மாவட்ட தலைவர் முஹம்மது யாக்கூப், மமக மாவட்ட செயலாளர் சலீம், மாநில தொண்டரணி துணை செயலாளர் கோகோஅலி, தமுமுக நகர செயலாளர் களஞ்சியம்பீர், மமக நகர செயலாளர் ஆதம்பின் ஆஷிக், நகர பொருளாளர் சாகுல்ஹமீது, நகர துணைச் செயலாளர் ஜாபர் ஷரீப், அப்துல் முஸவ்வீர், நகர செயலாளர் கோயா பீர், 9 வது வார்டு பொறுப்பாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



▶ காரைக்கால் மாவட்டத்தில் அமைந்துள்ள திருபட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று பல்வேறு பராமரிப்பு பணிகள் நடைபெறுவதை தொடர்ந்து எம்.எல்.ஏ நாகதியாகராஜன் நடைபெறும் பராமரிப்பு பணிகளை நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் பணிகளை சுத்தமாக செய்து தருமாறு கேட்டுக் கொண்டார். ஆரம்ப சுகாதார நிலையத்தின் அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டு போதிய மருந்துகள் கையிருப்பில் உள்ளனவா என்பது குறித்து மருத்துவர் உமாவுடன் ஆலோசித்தார். மேலும் மருத்துவ ஊழியர்களின் பதிவேட்டையும் பார்வையிட்டார்.

# பொறையாரில் அண்ணா தொழிற்சங்கத்தினர் வேலை நிறுத்தம்



தரங்கம்பாடி, ஜன.10–

பொறையார் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் அண்ணா தொழிற்சங்கம் , சிஐடியு மற்றும் கூட்டமைப்பு தொழிற்சங்கங்கள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் போராட்டத்தில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.

பொறையார் அரசு போக்குவரத்து பணிமனையில் இருந்து 26 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதில் 9 நகர பேருந்துகள், 17 புறநகர் பேருந்துகள் மயிலாடுதுறை , சீர்காழி, சிதம்பரம் , சென்னை, நாகப்பட்டினம் வரை இயக்கப்படுகிறது. இதில் 4 பேருந்துகள் இயக்கப்படவில்லை.

அண்ணா தொழிற்சங்கம் கூட்டமைப்புசார்பில்நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், போக்குவரத்து துறையில் உள்ள காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், ஊதிய உயர்வு வழங்க வேண்டும், கருணை அடிப்படையில் விண்ணப்பித்து காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு பணி வழங்க வேண்டும், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு நிலுவை தொகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் ஊழியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சதுரங்க போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற மாணவிக்கு பாராட்டு



அரியலூர் : ஜன. 10–

சதுரங்க போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சதுரங்க வீராங்கனை சர்வாணிகா, மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, பாராட்டு தெரிவித்தார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஐக்கிய அரசு எமிரேட்ஸ் துபாயில் நடைபெற்ற ஆசிய இளையோருக்கான சதுரங்க போட்டிகளில் Rapid, Blitz, Standard ஆகிய பிரிவுகளில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையத்தைச் சேர்ந்த சரவணன் - அன்பு ரோஜா இவர்களின் மகள் சர்வாணிகா கலந்துகொண்டு 5 தங்கப்பதக்கங்களையும், 1 வெள்ளிப் பதக்கமும் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்தார். அதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா அவர்களை சந்தித்து வாழ்த்துப்பெற்றார். இந்நிகழ்வில் அரியலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் லெனின் மற்றும் பலர் உடனிருந்தனர்.



▶ மதுரை கலெக்டர் அலுவலகத்தில் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு இளைஞர் பேரவை மாநில நிறுவன தலைவர் ஜெய கார்த்தி ராமமூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தனர். இந்த மனுவில் ஜல்லிக்கட்டு போட்டியில் மாடுபிடி வீரர்கள் உயிரிழந்தால் ரூ. 20 லட்சம் நிவாரணம் தர வேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்கிட வேண்டும். மாடுபிடி வீரர்களுக்கு காப்பீடு தொகை அரசு செலுத்த வேண்டும். ஜல்லிக்கட்டு போட்டியின் போது அதிக காளைகளை அடக்கிய முதல் பரிசு பெறும் வீரர்களுக்கு கல்வி தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். ஜல்லிக்கட்டு காளைகளுக்கு ஆன்லைன் பதிவு முறையை ரத்து செய்ய வேண்டும் என்று மனுவில் கூறியுள்ளார். உடன் சதீஷ்குமார், வினோத் ராஜா, சரவணன், திருமுருகன் மற்றும் பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு கூட்டம்



புதுக்கோட்டை , ஜன. 10–

புதுக்கோட்டை மச்சுவாடி அரசு முன் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பொதுத் தேர்வு எழுதக் கூடிய 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களது பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு கூட்டம் பள்ளி முதல்வர் சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் நடந்து முடிந்த அரையாண்டு தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் குறித்தும் பொதுத் தேர்வில் மாணவர்கள் நூறு சதவீதம் தேர்ச்சி பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் அனைத்து பெற்றோர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறந்த ஆலோசனைகளை வழங்கினர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை வகுப்பாசிரியர்கள் சித்ரா மற்றும் வெங்கடசுப்ரமணியன் ஆகியோர் செய்திருந்தனர். விழாவில் வந்திருந்தோரை முதுகலை ஆசிரியர் பிரபு வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் கந்தசாமி, சரவணன், இயலரசன்,செல்வராணி மற்றும் பிரகாசம் ஆகியோர் பள்ளி தேர்ச்சி சதவீதம் அதிகரிப்பது குறித்து பேசினர். இறுதியில் ஆசிரியர் இன்பராஜ் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

# போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறைவான பேருந்துகளே இயக்கப்பட்டன



புதுக்கோட்டை, ஜன. 10–

அரசுப் போக்குவரத்து ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் புதுக்கோட்டை மாவட்டத்தில் குறைவான பேருந்துகளே இயக்கப்பட்டது. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்தைச் சந்தித்தனர்.

காலிப்பணி யிடங்களை நிரப்ப வேண்டும். போக்குவரத்துக் கழகங்களின் வரவுக்கும் செலவுக்குமான வித்தியாசத் தொகையை அரசு பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 100 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள அகவிலைப்படி உயர்வை வழங்க வேண்டும். புதிய பென்சன் திட்டத்தை கைவிட வேண்டும். 15–ஆவது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தயை உடனடியாகத் தொடங்க வேண்டும். வாரிசு பணி நியமனத்தை மேற்கொள்ள வேண்டும் ஆகிய 6 அம்சக் கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன.

இதுதொடர்பாக அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் நேற்று முதல் ஏடிபி, சிஐடியு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தன. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் நேற்று புதுக்கோட்டை மாவட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பேருந்துகளே இயக்கப்பட்டன. பாதிக்மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லை. பாதிக்கும் மேற்பட்ட பேருந்துகள் பணிமனைகளிலேயே நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில், போக்குவரத்துக்கழக நிர்வாகம் ஓய்வு பெற்ற ஊழியர்களையும், பேருந்துகளை ஓட்டி அனுபவம் இல்லாத கார், வேன், ஆட்டோ ஓட்டுநர்களைக் கொண்டும் சில வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டன.

மேலும், ஒரு நாளைக்கு ஒரு வழித்தடத்தில் 6 முதல் 8 முறை சென்றுவரக்கூடிய பேருந்துகளை ஒன்று அல்லது இரண்டு முறை இயக்கிவிட்டு, அதே தொழிலாளர்களை வேறு வழித்தடத்தில் ஒன்றிரண்டு முறை இயக்க வைத்து அதிகமான வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டதாக கணக்குக் காண்பிக்கப்படுவதாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்ள் புதுக்கோட்டை பணிமனை முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் அண்ணா தொழிற்சங்க மண்டலப் பொதுச் செயலாளர் எஸ்.செபஸ்தியான், சிஐடியு பொதுச் செயலாளர் ஆர். மணிமாறன், ஏஐடியுசி பொதுச் செயலாளர் டி.எம்.கணேசன், ஓய்வுபெற்ற போக்குவரத்து தொழிலாளர் நலச்சங்க நிர்வாகிகள் இளங்கோவன், லோகநாதன், திருநாவுக்கரசு, சிஐடியு மாவட்டத் தலைவர் கே.முகமதலிஜின்னா, பொருளாளர் எஸ். பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஆவுடையார் கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் தண்ணீர் பாய்ச்சுவதில் பிரச்சனை, உதயமாணிக்கம் கிராம மக்கள் உள்ளிருப்பு போராட்டம்



ஆவுடையார்கோவில் : ஜன. 10, புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகா, பலவரசன் ஊராட்சியில் உள்ள உதயமாணிக்கம் கிராமத்தில் ஏரியில் தண்ணீர் பாய்ச்சுவதில் இரு தரப்புக்கு இடையே கடந்த ஒரு வாரமாக பிரச்சனை இருந்து வந்தது.

இதில் தலித் மக்கள் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சாமல் ஆவுடையார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் சிவகாமி ஒரு தரப்பினருக்கு ஆதரவாக செயல்பட்டதாகவும், அவருக்கு உடந்தையாக விஏஓ, தலையாரி செயல்பட்டதாகவும் கூறி உதயமாணிக்கம் கிராம தலித் மக்கள் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் உள்ளிருப்புபோராட்டத்தை அறிவித்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனை அறிந்த ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மார்ட்டின் லூதர் கிங் போராட்டக்காரர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார், இதில் விஏஓ, RI ஆகியோர்கள் முன்னிலையில் தண்ணீர் பாய்ச்ச ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் உறுதியளித்ததால் உள்ளிருப்பு போராட்டம் தற்சமயம் கைவிடப்பட்டது. இந்த போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் இரா. தமிழ்ச்செல்வன். மீனவர் மேம்பாட்டு பேராயத்தின் மாவட்ட செயலாளர் பீட்டர் வளவன், விசிக தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் காத்த முத்து, மல்லர் விடுதலை முன்னணி அறந்தாங்கி பொறுப்பாளர் பழனி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டகிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை ஆஞ்சநேயர் திருக்கோயிலில் மார்கழி திருப்பாவை உற்சவம் நடைபெற்றது



புதுக்கோட்டை : ஜன. 10, புதுக்கோட்டை, தெற்கு 4 -ஆம் வீதி, பெரிய மார்கெட் சந்திப்பிலுள்ள இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் மார்கழி திருப்பாவை உற்சவம் நடைபெற்றது.

மார்கழி முதல் நாளிலிருந்து தினமும் மாலையில் நடைபெறும் திருப்பாவை உற்சவ நிகழ்வில் பக்தி சொற்பொழிவாளர் சுந்தர்ராஜன் பக்தி சொற்பொழிவும், திருப்பாவை பாடல்களையும் பாடினார். அவர் கூறியபோது மாதங்களிலேயே மிக உயர்ந்த மாதமாக கருதப்படுவது மார்கழியின் 30 நாட்களும் என்ன செய்தால் நம்முடைய பிரச்சனைகள் அனைத்தும் தீரும். ஆனந்தம் பிறக்கும் மார்கழியின் 30 நாட்களும் திருப்பாவை பாடல்களை பாடி, வெண் பொங்கல் படைத்து வழிபட்டு முடித்த பிறகு, பொங்கல் அன்று காலையிலும் திருப்பாவை பாடல்களை பாடி ஆண்டாளை மகிழ்ச்சியுடன் வழியனுப்பி வைக்க வேண்டும். அன்று காலை வீட்டில் விளக்கேற்றி வைத்து, " ஆண்டாள் தாயே, மார்கழியின் 30 நாட்களும் எங்களுடைய வீட்டிற்கு வந்து, நாங்கள் செய்த பூஜை, வழிபாடுகளை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிந்தும், தெரியாமலும் ஏதாவது தவறி செய்திருந்தால் அவற்றை மன்னித்து எங்களுக்கு அருள் செய்ய வேண்டும். எங்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்றி வைத்து, எங்களின் வீட்டில் மகிழ்ச்சி பொங்க செய்ய வேண்டும். பெருமாளின் அருளும், அனைத்து விதமான செல்வங்களும், இன்பங்களும் எங்களுக்கு கிடைக்க நீ அருள் செய்ய வேண்டும்" என வேண்டிக்கொள்ள வேண்டும்.

மார்கழி மாதத்தில் ஆண்டாள் பாடிய திருப்பாவை பாசுரங்களை நாமும் பாடி வழிபட்டால் அனைத்து விதமான கஷ்டங்களும் தீருவதுடன், வாழ்வில் அளவில்லாத உச்சபட்ச இன்பங்களை பெற முடியும் என்று கூறினார். நிகழ்வில் திருக்கோகர்ணம் ஸ்ரீநிவாசன், அனுமன் திருச்சபையினர், திருப்பதி தேவஸ்தான ஆழ்வார்கள், திவ்ய பிரபந்த செயல் திட்ட வெங்கடேச ராமானுசதாசன், ஆன்மிகநெறியாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை அனுமன் திருச்சபை நிர்வாகிகள் செய்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கீழகுளத்துப்பட்டியில் வசித்து வரும் அடைக்கி என்ற ஆதரவற்ற பெண்மணிக்கு அவர்களின் குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்திட 10 ஆயிரம் மதிப்பிலான இரண்டு ஆடுகளை திருமயம் பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை மூலமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஊராட்சிமன்ற தலைவர் பழனியப்பன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அறக்கட்டளை தலைவர் பாலாஜி மற்றும் மாற்றுத்திறனாளி குழு தலைவர் சந்தோஷ்குமார் நிர்வாகிகள் நல்லசிவன்,ரமேஷ் ஆகியோர்கள் கலந்துக்கொண்டார்கள்.

## “நீதி நிலைநாட்டப்பட்டது ஆறுதல் அளிக்கிறது”

# பில்கிஸ் பானு வழக்கு தீர்ப்புக்கு முதல்வர் ஸ்டாலின் வரவேற்பு



புதுடெல்லி : ஜன. 10, “சகோதரி பில்கிஸ் பானு வழக்கில் இறுதியில் நீதி நிலைநாட்டப்பட்டு இருப்பது ஆறுதல் அளிக்கிறது” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பில்கிஸ் பானு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 11 பேர் முன்கூட்டியே விடுதலைசெய்யப்பட்டது செல்லாது. இரு வாரங்களில் 11 பேரும் சிறையில் சரண் அடைய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கள்கிழமை தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை வரவேற்றுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். “சகோதரி பில்கிஸ் பானு வழக்கில் இறுதியில் நீதி நிலைநாட்டப்பட்டு இருப்பது ஆறுதல் அளிக்கிறது. இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.

குஜராத் மாநில பாஜக அரசு, உண்மைகளை மறைத்துகுற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் இடித்துரைத்திருப்பது, அரசியல் இலாபங்களுக்காக நீதி வளைக்கப்பட்டதை வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறது.

தங்களுக்கு வேண்டியவர்கள் என்றால் உண்மைகளை மறைத்து, நீதிமன்றத்தையே தவறாக வழிநடத்தி கொடுங்குற்றவாளிகளை விடுவிக்க பிரயத்தனம் செய்யும் பாஜக ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் நீண்டகால சிறைவாசிகளை நன்னடத்தையின் அடிப்படையிலும் வயது மூப்பு கருதியும் சட்டபூர்வமாக முன்விடுதலை செய்யும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவது அவர்களது இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது.

“நீதி கிடைத்தது கண்டு கண்ணீர் மல்கினேன்; என் குழந்தைகளைக் கட்டி அணைத்துக் கொண்டேன்; ஒரு பெரிய மலையையே என் மேல் இருந்து அகற்றியதுபோன்ற உணர்வைப் பெறுகிறேன். இப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன்” என்று சகோதரி பில்கிஸ் பானு கூறியுள்ள வார்த்தைகள் அவர் பட்ட இன்னல்களை விவரிக்கின்றன.

நீதி கேட்டு அவர் நடத்திய நெடும்பயணத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி, பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஊக்கத்தையும் போராடும் மன உறுதியையும் தருவதாகும். அஞ்சாமலும் சலிப்பின்றியும் அவர் நடத்திய போராட்டம் வரலாற்றில் நிலைத்து நிற்கும். அவருக்கும் அவருக்கு துணையாக நின்ற மூத்த வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் அனைவருக்கும் என் பாராட்டுகள்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# நிதி முறைகேடு வழக்கில் கேரள முதலமைச்சருக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்




திருவனந்தபுரம் : ஜன. 10, நிவாரண நிதியில் முறைகேடு செய்ததாக தொடரப்பட்ட வழக்கில், முதலமைச்சர் உள்ளிட்ட 18 பேருக்கு நோட்டீஸ் பிறப்பித்து கேரளா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரளா லோக் ஆயுக்தா நீதிமன்றத்தில் ஆர்.எஸ். சசிகுமார் என்பவர் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில், "முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 18 அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி, முதலமைச்சர் நிவாரண நிதியை தனிப்பட்ட நலன்கள் மற்றும் ஊழல் செய்யும் நோக்கத்துடன் பயன்படுத்தியதாக குற்றம்சாட்டி இருந்தார்.

மேலும், முதலமைச்சரின் நிவாரண நிதியைத் தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் முதலமைச்சர் மற்றும் அவருக்கு கீழ் பணியும் 18 அமைச்சர்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும்" எனக்கோரி இருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சிரியாக் ஜோசப், பாபு மேத்யூ ஜோசப், ஹருண் உல் ரஷீத் ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த ஆண்டு நவம்பர் 13-ம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

நீதிபதிகள் அளித்த அந்த உத்தரவில், ‘பேரிடர் காலங்களில் முதலமைச்சர் எடுத்த முடிவுகள் தன்னிச்சையாக இருந்தாலும், அரசியல் உள்நோக்கத்துடன் மட்டுமே எடுக்கப்பட்டன என்பதை தீர்மானிக்க போதிய ஆதாரங்கள் இல்லை. அதேபோல் புகார் அளித்தவரின் குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படவில்லை’ என தீர்ப்பு வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் லோக் ஆயுக்தா நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக கேரளா உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி தேசாய், நீதிபதி அருண் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது இதுதொடர்பாக விளக்கம் அளிக்க கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அவரது அமைச்சரவையில் இருந்த 18 பேருக்கு நோட்டீஸ் பிறப்பித்து, நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதனால் கேரளாவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# 14 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தமிழ்நாடு கபாடி அணிக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவருக்கு மாவட்ட அதிகாரி பாராட்டு



புதுக்கோட்டை, ஜன, 10, இந்திய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு ( எஸ்.ஜி.எப்.ஐ) சார்பில் மாநில அளவில் கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு கபாடி விளையாட்டு போட்டியில் அரசு பகுதி நிதியுதவி பெறும் இலுப்பூர் ஆர்.சி.மேல்நிலைப்பள்ளியில் 9- ம் வகுப்பு பயிலும் மாணவர் சி.ஜனார்த்தனன் கலந்துகொண்டு தமிழ்நாடு அணிக்காக தேர்வு செய்யப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து சட்டீஸ்கர் மாநிலம், ராஞ்சியில் நடைபெறும் தேசிய அளவிலானபோட்டியில் அவர் கலந்துகொள்ள உள்ளார். இதனையொட்டி அந்த மாணவர் புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளாவை சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது அந்த மாணவருக்கு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் பொன்னாடை அணிவித்து பாராட்டி தேசிய அளவிலான போட்டியில் தமிழ்நாடு அணியில் கலந்துகொண்டு வெற்றி பெற வாழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பள்ளித்துணை ஆய்வாளர் கி. வேலுச்சாமி, தலைமையாசிரியை அருட்சகோதரி ஜான்சி மற்றும் பலர் உடன் இருந்தனர். 14 வயதிற்குட்பட்ட கபாடி ஆண்கள் பிரிவில் தமிழ்நாடு அணியில் இடம் பிடித்த ஜனார்த்தனனின் சொந்த ஊர் இலுப்பூர் அருகே உள்ள போலம்பட்டி என்னும் கிராமம் ஆகும். இவரது தந்தை சின்னையா சென்னையில் ஹோட்டலில் கூலித்தொழிலாளியாகவும், தாய் ரதி உள்ளூரில் தேசிய ஊரக வேலை உறுதி திட்ட கூலி வேலை பார்ப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வியாச கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் நாட்டு நலப் பணித்திட்ட சிறப்பு முகாம்



வாசுதேவநல்லூர்:ஜன. 10, தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் சுப்பிரமணியபுரத்தில் வியாச கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் தலைவன்கோட்டை கிராமத்தில் நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவி ஷர்மிளா கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தார். 108 ஆம்புலன்ஸ் சேவை, தீயணைப்புதுறை செயல் விளக்கம், அகர்வால் கண் மருத்துவமனையின் இலவச சிகிச்சை முகாம், இல்லத்தரசிகளுக்கான கோலப்போட்டி, நல்லொழுக்கத்தை தூண்டும் விழிப்புணர்வு பேரணி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் வெள்ளியப்பன் கலந்துகொண்டு நாட்டு நல பணித்திட்டதின் நோக்கம், சிறப்பு முகாமின் பயன்கள், மேலும் தேசிய அளவில் முக்கியத்துவம் குறித்து சிறப்புரை ஆற்றி மாணவியர்களிடம் கலந்துரையாடி முகாம் பற்றிய செய்திகளை கேட்டறிந்தார்.

முகாமிற்கு சிறப்பு விருந்தினராக முத்து ராமச்சந்திரன் வழக்கறிஞர், சுந்தரமூத்து சுவாமி, குருசாமி பாண்டியன், ராமகிருஷ்ணன், மருத்துவர் ராணிதுரைச்சி, குபேந்திர ராஜா, பால்பாண்டியன், மகேஸ்வரன், இசக்கிமுத்து, மணிகண்டன், கருப்பசாமி, முருகையா பாண்டியன், சுப்பையா பாண்டியன், மகாலட்சுமி, மருது பாண்டியன், மருத்துவர் ராஜராஜன், ஜெயராமன், வேலுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாணவியர்கள் யோகா, தியானம் வழங்கி சிறப்பித்தனர், முன்னாள் ஊராட்சிமன்றத்தலைவர் பூஜை பாண்டியன், ஒன்றிய கவுன்சிலர் விஜயாபாண்டியன் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினர். ஒவ்வொரு நாள் மாலை பொழுதிலும் நன்னெறி சார்ந்த கலை நிகழ்ச்சிகள் மாணவியர்கள் நடத்தினர், முகாம் ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் ஈஸ்வரன், திட்ட அலுவலர் ஆவுடையம்மாள், உதவி திட்ட அலுவலர் முத்துலட்சுமி மற்றும் ஊர் பொதுமக்கள் ஏற்பாடு செய்திருந்தனர், முகாமில் கல்லூரி சேர்மன் வெள்ளத்துரை பாண்டியன், நிர்வாக இயக்குனர் வெள்ளத்தாய், செயலாளர் சுந்தர் மற்றும் பேராசிரியைகள் கலந்து கொண்டு சிறந்த குழுவிற்கும் சிறந்த சேவை செய்தவருக்கும் பரிசுகளும், கேடயங்களும், நினைவு பரிசுகளாக வழங்கப்பட்டன.

## போக்குவரத்து தொழிலாளர்கள் பணிக்கு திரும்பிவிட்டனர்

# மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்ய நடவடிக்கை – அமைச்சர் சிவசங்கர் தகவல்



சென்னை : ஜன. 10, அரசுப் போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு தடுத்து நிறுத்தப்பட்டது அதிமுக ஆட்சியில்தான் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பழைய ஓய்வுதிய திட்டம், காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து தொழிற்சங்கங்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தெரிவித்தனர். இதையடுத்து தொழிலாளர் நல இணை ஆணையர் தலைமையில் போக்குவரத்து தொழிற்சங்கங்கள் மற்றும் போக்குவரத்து கழக அதிகாரிகளுடன் முத்தரப்பு பேச்சுவார்த்தை 3 கட்டங்களாக நடத்தப்பட்டது. அதில் உடன்பாடு எட்டப்படாததால் போக்குவரத்து ஊழியர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சென்னை கோயம்பேட்டில் பேருந்துகள் இயக்கத்தை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் சிவசங்கர், " தமிழ்நாடு முழுவதும் பொதுமக்களுக்கு பாதிப்பின்றி வழக்கம்போல் அரசு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பொதுமக்கள் பாதுகாப்பாக பயணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்கழக தொழிற்சங்கங்கள் முன்வைத்து கோரிக்கைகளில் 2 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. காலிப்பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட 2 கோரிக்கைகள் நடைமுறையில் உள்ளன. அகவிலைப்படி உயர்வை நிறுத்தியது அதிமுக ஆட்சியில்தான். கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்படாத பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தீபாவளியின் போது போக்குவரத்துக்கழக தொழிலாளர்களுக்கு போனஸ் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

நிதி நிலை காரணமாக அகவிலைப்படி உயர்வு உடனடியாக வழங்கப்படாத நிலை உள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பின்றி அரசு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான பேருந்துகள் குறித்த நேரத்தில் இயக்கப்பட்டுள்ளன. போராடுவது தொழிலாளர்கள் உரிமை; ஆனால் மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் போராட்டம் நடத்த வேண்டும். தொழிற்சங்கங்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்க கூட்டமைபின் தொழிலாளர்களே பணிக்கு வந்து பேருந்துகளை இயக்கி வருகின்றனர். தங்கள் அமைப்பு பலத்தை காட்டுவதற்காக போராட்டதை அறிவித்த கூட்டமைப்பின் தலைவர்கள், தற்போது அதனை கைவிட முடியாமல் தவிக்கின்றனர்” என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

# தமிழகத்தில் பொதுத்தேர்வு தேதிகளில் மாற்றமில்லை அமைச்சர் அன்பில் மகேஷ் உறுதி

சென்னை: ஜன. 10, தமிழகத்தில் 10,11, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தேதிகளில் மாற்றமில்லை என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் நடக்க இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், தேர்தலால் பொதுத்தேர்வு பாதிக்கப்படுமா என்ற சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பதில் தெரிவித்தார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் அன்பில் மகேஷ். "பொதுவாகவே தேர்தல் தேதி அறிவிக்கும்போது ஒரு மாநிலத்தின் தேர்வு தேதிகளுக்கு தகுந்தாற்போல் அறிவிக்கப்படும். இது வழக்கமான ஒன்று. ஏனென்றால் இது மாணவர்கள் நலன் சார்ந்த விஷயம். மார்ச் மாதம் ஆரம்பிக்கும் தேர்வுகளுக்கு மாணவர்கள் ஒரு வருடமாக தயாராவார்கள் என்பதால், தேர்வு தேதிக்கு தகுந்தாற்போலவே தேர்தல் தேதி அமையும்.

ஏற்கெனவே ஜாக்டோ - ஜியோ குழுவினர் 12 விதமான கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இதுதொடர்பாக ஆலோசனை நடத்தினோம். இன்றும் (ஜன.9) ஆலோசனை நடக்கவுள்ளது. ஆலோசனையின் முடிவுகளை முதல்வர் மற்றும் நிதித் துறை கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்." என்று தெரிவித்தார்.

# போக்குவரத்து தொழிற் சங்கத்தினரை அழைத்துப் பேசி போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் : ராமதாஸ்



சென்னை : ஜன. 10-

போக்குவரத்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழக அரசு தன்முனைப்பு பார்க்காமல் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “15-ஆம் ஊதிய ஒப்பந்த பேச்சுகளை உடனடியாக தொடங்க வேண்டும், ஓய்வூதியர்களுக்கு கடந்த 96 மாதங்களாக வழங்கப்படாத அகவிலைப்படி உயர்வை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். வேலை நிறுத்தத்தால் பாதிப்பு இல்லை என்றும், மாநிலம் முழுவதும் 93.90% பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் தமிழக அரசின் சார்பில் கூறப்பட்டாலும் கள நிலைமை வேறாக உள்ளது. நகரப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்பட்டாலும் கூட, ஊரகப்பகுதிகளில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்களும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் ஆளுங்கட்சியின் தொழிற்சங்கத்தினரைக் கொண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு வேலை நிறுத்தத்தின் போதும் கடைபிடிக்கப்படும் பொதுவான உத்தி தான் இது. ஆளுங்கட்சி தொழிற்சங்கத்தினர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பேருந்துகளை இயக்குகிறார்கள் என்பதாலேயே வேலை நிறுத்தம் தோல்வியடைந்து விட்டதாகவோ, அரசு வெற்றி பெற்று விட்டதாகவோ கருத முடியாது. வேலை நிறுத்தத்தின் தொடக்க நேரத்தில் இயக்கப்படும் எண்ணிக்கையிலான பேருந்துகளை தொடர்ந்து இயக்க முடியாது. ஆளுங்கட்சி தொழிற்சங்கத்தினருக்கும் ஓய்வு தேவை என்பதால் நேரம் செல்ல செல்ல இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை குறையும். இது தான் எதார்த்தம் ஆகும்.

தொழிற்சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தம் மேற்கொள்ளும் போது, அதில் உள்ள நியாயங்களை உணர்ந்து கோரிக்கைகளை நிறைவேற்றுவது தான் சரியான உத்தி ஆகும். மாறாக வேலை நிறுத்தத்தை முறியடித்து விட்டோம் என்பது போன்ற பொய்யான தோற்றத்தை ஏற்படுத்த முயல்வது சரியல்ல. புரையோடிப் போன புண்ணை புனுகு போட்டு மறைக்க முடியாது என்பதை அரசு உணர வேண்டும்.

8 கோரிக்கைகளை முன்வைத்து போராடி வரும் தொழிற்சங்கங்கள் , தங்களின் நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வந்து, ஓய்வூதியர்களுக்கு கடந்த 96 மாதங்களாக வழங்கப்படாத அகவிலைப்படி உயர்வை வழங்க வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை மட்டும் நிறைவேற்றினால் போதுமானது. 96 மாதங்களுக்கான நிலுவைத் தொகை ரூ.2000 கோடியை எவ்வாறு வழங்குவது என்பதைக் கூட பின்னர் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்று அறிவித்துள்ளன. அகவிலைப்படி உயர்வு கோரிக்கையை மட்டும் நிறைவேற்ற மாதத்திற்கு சுமார் ரூ.20 கோடி மட்டுமே கூடுதலாக செலவாகும். இந்தக் கோரிக்கையைக் கூட நிதிநிலையை காரணம் காட்டி நிறைவேற்ற மறுப்பது நியாயமல்ல.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் அரசுக்கு எதிரிகள் அல்ல. அவர்களும் போக்குவரத்து சூழல் அமைப்பின் ஓர் அங்கம் தான். அவர்கள் இல்லாமல் அரசோ, அரசு இல்லாமல் அவர்களோ செயல்பட முடியாது. இதை உணர்ந்து தன்முனைப்பை கைவிட்டு போக்குவரத்து தொழிற்சங்கத்தினரை அழைத்து அரசு பேச வேண்டும். அவர்களின் ஒற்றைக் கோரிக்கையை நிறைவேற்றி மற்ற கோரிக்கைகள் தொடர்பாக வாக்குறுதி அளித்து வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# துப்பாக்கி சுடுதலில் வருண் தோமர், ஈஷா சிங் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி

**ஜகார்த்தா : ஜன. 10,**

**பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான துப்பாக்கி சுடுதல் ஆசிய தகுதி சுற்று இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்று வருகிறது.**

இதில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் வருண் தோமர் 239.6 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றதுடன் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார். மற்றொரு இந்திய வீரரான அர்ஜுன் சீமா 237.3 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார்.





மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல்பிரிவில் இந்தியாவின் ஈஷா சிங் 243.1 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்று பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார்.

பாகிஸ்தானின் கிஷ்மலா 236.3 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், இந்தியாவின் ரிதம் சங்வான் 214.5 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

# முகமது ஷமி, வைஷாலி உள்பட 26 பேருக்கு அர்ஜுனா விருது : குடியரசு தலைவர் வழங்கினார்

**புதுடில்லி : ஜன. 10,**

**விளையாட்டு துறையில் சாதனைப் படைத்தவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் அர்ஜுனா விருது, கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, செஸ் போட்டியில் சாதனைப் படைத்த தமிழக வீராங்கனை வைஷாலி உள்ளிட்ட 26 பேருக்கு வழங்கப்பட்டது.**

விளையாட்டுத் துறையில் சிறந்த பங்களிப்பை அளித்து வரும் வீரர்கள், வீராங்கனைகளை கௌரவிக்கும் வகையில் மத்திய அரசு அர்ஜுனா விருது, கேல் ரத்னா விருது, துரோணாச்சாரியா விருது, வாழ்நாள் சாதனையாளருக்கான மேஜர் தயான் சந்த் விருது ஆகியவற்றை வழங்கி வருகிறது.

அதன்படி, 20230-ம் ஆண்டுக்கான அர்ஜுனா விருதுக்கு ஓஜாஸ் பிரவீன் தியோடாலே (வில்வித்தை), அதிதி கோபிசந்த் சுவாமி (வில்வித்தை), எம். ஸ்ரீசங்கர் (தடகளம்), பருல் சவுத்ரி (தடகளம்), முகமது ஹுசாமுதீன் (குத்துச்சண்டை), ஆர். வைஷாலி (செஸ்), முகமது ஷமி (கிரிக்கெட்), அனுஷ் அகர்வாலா (குதிரையேற்றம்), திவ்யக்ரிதி சிங் ( குதிரையேற்ற உடை),

தீக்ஷா தாகர் (கோல்ஃப்), கிருஷன் பகதூர் பதக் (ஹாக்கி), புக்ரம்பம் சுஷிலா சானு (ஹாக்கி), பவன்குமார் (கபடி), ரிது நேகி (கபடி), நஸ்ரின் (கோ-கோ), பிங்கி (உருட்டு பந்து), ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் (துப்பாக்கிச்சுடுதல்), இஷா சிங் (துப்பாக்கிசுடுதல்), ஹரிந்தர் பால் சிங் சந்து (ஸ்குவாஷ்), அயிகா முகர்ஜி (டேபிள் டென்னிஸ்), சுனில் குமார் (மல்யுத்தம்), ஆன்டிம் (மல்யுத்தம்), நவோரெம் ரோஷிபினா தேவி (உஷு), சீத்தல் தேவி (பாரா வில்வித்தை), இல்லூரி அஜய் குமார் ரெட்டி (பார்வையற்றோர் கிரிக்கெட்), ப்ராச்சி யாதவ் (பாராகேனோயிங்) ஆகிய 26 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.





இவர்களில் செஸ் வீராங்கனை ஆர்.வைஷாலி தமிழகத்தை சேர்ந்தவர் ஆவார்.

இதேபோல், துரோணாச்சாரியார் விருதுக்கு ஐந்து பேரும், வாழ்நாள் சாதனையாளர் பிரிவில் 3 பேரும், தயான்சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு 3 பேரும் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையான ராஷ்டிரபதி பவனில் நேற்று குடியரசு தலைவர் திரௌபதி முர்மு விருதுகளை வழங்கினார்.

அதன்படி, இந்திய கிரிக்கெட் அணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமிக்கு அர்ஜுனா விருதை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார். கடந்த ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடியதற்கு இவரது பெயரை அர்ஜுனா விருதுக்கு பிசிசிஐ பரிந்துரைத்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மற்ற விளையாட்டு வீரர்களுக்கும் அந்தந்த பிரிவில் விருதுகள் வழங்கப்பட்டன.

# இந்தியா – தென் ஆப்பிரிக்கா டெஸ்ட் போட்டி நடந்த கேப்டவுன் பிட்ச் திருப்தியற்றது : ஐசிசி தர நிர்ணயம்

**துபாய் : ஜன. 10,**

**இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி நடந்த கேப்டவுன் பிட்ச் திருப்தியற்றது என ஐசிசி தர நிர்ணயம் செய்துள்ளது.**



நடந்து முடிந்த கேப்டவுன் டெஸ்ட் போட்டி கிரிக்கெட் வரலாற்றில் மிக துரிதமாக முடிவடைந்த போட்டி என்ற சாதனையை நிகழ்த்தியது. கேப்டவுனில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டி, ஆட்டத்தின் முதல் நாளே 23 விக்கெட்கள் சரிந்தன. ஒட்டுமொத்த போட்டியும் நான்கரை செஷன்களில் முடிவடைந்தன. இந்த ஆட்டத்தில் மொத்தம் 642 பந்துகளே வீசப்பட்டது. இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் மிக குறைந்த பந்துகளில் முடிவடைந்த போட்டியாக இது அமைந்தது. அதற்கு காரணம் மோசமான கேப்டவுன் பிட்ச்தான். கேப்டவுன் பிட்ச் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக திகழ்ந்தது சர்ச்சைக்குள்ளானது.

"பிட்ச்களின் தரத்தை மதிப்பீடு செய்வதில் ஐசிசியும் அதன் ஆட்ட நடுவர்களும் ஏன் இரட்டை நிலைப்பாடு கொள்கின்றனர், பாரபட்சம் பார்க்கின்றனர்? இது ஏன் என்று தெரியவில்லை" என இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மா கேள்வி எழுப்பியிருந்தார். அவர் மட்டுமல்ல, தென் ஆப்பிரிக்கா டீன் எல்கர் பிட்ச்சின் தன்மையை குறித்து முதல் நாள் முடிவிலேயே அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், ஐசிசி நடுவர் கிறிஸ் பிராட் கேப்டவுன் பிட்ச்க்கான தனது மதிப்பீட்டை அறிவித்துள்ளார். அதன்படி, கேப்டவுன் பிட்ச் திருப்தியற்றது என தர நிர்ணயம் செய்துள்ளார். கிறிஸ் பிராட் இது தொடர்பாக விடுத்துள்ள குறிப்பில், "இந்த ஆடுகளத்தில் பேட்டிங் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. போட்டி முழுவதும் பந்து விரைவாகவும், சில சமயங்களில் பயமுறுத்தும் விதமாகவும் எழும்பியது. இதனால் ஷாட்களை விளையாடுவது கடினமாக இருந்தது. பல பேட்டர்கள் அடிபட்டனர். மேலும் மோசமான பவுன்ஸ் காரணமாக பல விக்கெட்டுகளும் விழுந்தன" என்று தெரிவித்துள்ளார்.

# கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு பிரம்மாண்டமாக தயாராகும் சென்னை நேரு விளையாட்டு மைதானம்

**சென்னை : ஜன. 10,**

**6-வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டி வரும் ஜனவரி 19-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை தமிழகத்தில் உள்ள சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் நடைபெறுகிறது.**


இந்த போட்டியில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து 18 வயதுக்குட்பட்ட பிரிவில் சுமார் 5,500-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் மற்றும் 1600-க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். இந்த ஆண்டு டெமோ விளையாட்டாக இடம்பெற உள்ள தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் உட்பட மொத்தம் 27 விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த போட்டிக்காக தமிழக விளையாட்டு மேம்பாட்டு வாரியம் முழு வீச்சில் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக கால்பந்து ரசிகர்களால் 'மெரினா அரங்கம்' என அழைக்கப்படும் புகழ்பெற்ற ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானம் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.

இந்த மைதானம் 1993-ம் ஆண்டு கட்டப்பட்டது. புகழ்மிக்க இந்த மைதானம் 30 வருடங்களுக்குப் பின்னர் தற்போது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிக்காக சுமார் ரூ.25 கோடி செலவில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியில் சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் முக்கிய நிகழ்வான தடகள போட்டிகள் மற்றும் கால்பந்து போட்டிகளின் அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டி நடைபெறுகிறது.

மைதான மறுசீரமைப்பின் முக்கிய பகுதியாக தடகள ஓடுபாதை புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. 10 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட 'டெரகோட்டா செங்கல் சிவப்பு' நிறமுடைய பழைய ஓடுபாதை நீக்கப்பட்டு நீல நிறத்திலான ஓடுபாதை நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இந்த நீல நிற ஓடுபாதை ஆந்திர மாநிலம் குண்டூரில் உள்ள ஆச்சார்யா நாகார்ஜுனா பல்கலைக்கழகத்தில் மட்டும்தான் உள்ளது.

இந்த நீல நிற ஓடுபாதை சர்வதேச அளவில் முதன்முறையாக கடந்த 2013-ம் ஆண்டு ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப்பில் பயன்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக ரியோ ஒலிம்பிக் போட்டியில் (2016-ம் ஆண்டு) நீலநிற தடகள ஓடுபாதை பயன்படுத்தப்பட்டிருந்தது.



சென்னை நேரு விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீலநிற தடகள ஓடுபாதை 400 மீட்டர் கொண்டதாகும். இரவில் போட்டிகளை நடத்துவதற்கு வசதியாக மின்விளக்குகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அந்த வகையில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய டிஎம்எக்ஸ் ராட்சத மின்விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளது. மேலும் மைதானத்தில் போட்டியின் முடிவுகளை பார்வையாளர்கள் காணும் வகையில் புதிய திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. பார்வையாளர்களுக்கான இருக்கைகளும் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

கண்கவரும் வகையில் மைதானத்தின் வெளிப்புற பகுதிகளில் வண்ணப்பூச்சு கொண்டு அழகுப்படுத்தப்பட்டுள்ளது. நேரு விளையாட்டு அரங்குடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் உள்ள சென்னை நீச்சல் வளாகம், நேரு பூங்காவில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மைதானம் போன்ற பிற மைதானங்களும் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிக்காக தயார்படுத்தப்பட்டு வருகிறது.

டிராக் சைக்கிள் பந்தயம் நடத்துவதற்காக வண்டலூர் அருகே மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகத்தில் பிரத்யேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பெல்லாம் இந்த போட்டிகளை நடத்துவது என்றால் டெல்லிக்குதான் செல்ல வேண்டும். ஆனால் தற்போது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு வாரியம் டிராக் சைக்கிள் பந்தயத்துக்கான பாதையை சிறப்பாக வடிவமைத்து வருகிறது.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டியில் துப்பாக்கி சுடுதல் போட்டிகள் அலமாதியில் உள்ள சிவந்தி ஆதித்தன் துப்பாக்கி சுடுதல் மையத்திலும், வேளச்சேரி குருநானக் கல்லூரியில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள துப்பாக்கி சுடுதல் மைதானத்திலும் நடைபெற உள்ளன. குருநானக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சர்கஹி துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையத்தில் ரைபிள், பிஸ்டல் பிரிவுகளுக்கான போட்டி நடைபெற உள்ளது.

உலகத்தரத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தில் 50 மீட்டர் பிரிவில் 24 துப்பாக்கி சுடும் பாதைகளும், 25 மீட்டருக்கு 28 துப்பாக்கி சுடும் பாதைகளும், 10 மீட்டருக்கு 40 துப்பாக்கி சுடும் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த பயிற்சி மையத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்திருந்தார்.

வரலாறு சினிமா

# விஜயகாந்த் நினைவிடத்தில் பொதுமக்களுக்கு உணவு வழங்கிய விஷால்

**சென்னை : ஜன. 10,**

**வெளிநாட்டிலிருந்து நேற்று சென்னை திரும்பிய நடிகர் விஷால் கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் பொதுமக்களுக்கு உணவு வழங்கினார்.**

நடிகரும், தேமுதிக நிறுவனத் தலைவருமான விஜயகாந்த் கடந்த டிசம்பர் 28-ம் தேதி காலமானார். விஜயகாந்த்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ளாத பல திரைப் பிரபலங்கள் தேமுதிக அலுவலகத்தில் உள்ள நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்தவகையில் வெளிநாட்டிலிருந்து நேற்று சென்னை திரும்பிய நடிகர் விஷால் கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்துக்கு சென்று அங்கு அஞ்சலி செலுத்தினார் அவருடன் நடிகர் ஆர்யாவும் உடன் இருந்தார்.



இதனைத் தொடர்ந்து அங்கு வந்த பொதுமக்களுக்கு விஷால் உணவு வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் விஷால் பேசுகையில், "கலையுலகம் மட்டுமின்றி பொதுமக்கள் மத்தியிலும் நல்ல மனிதர் என்று பேர் வாங்கிய ஓர் அரசியல்வாதி, துணிச்சலான அரசியல்வாதி என்று பெயர் வாங்கியவர் விஜயகாந்த். பொதுவாக ஒரு நல்ல மனிதர் இறந்த பிறகுதான் சாமி என்று சொல்வோம். ஆனால் விஜயகாந்த் உயிருடன் இருக்கும்போதே சாமி என்று அழைக்கப்பட்டவர்.

'திருமூர்த்தி' என்ற திரைப்படம். அதில் டைட்டிலேயே அவர் மக்களுக்காக செய்த நல்ல விஷயங்களை காட்டியிருப்பார்கள். அவர் மீட்டுக் கொண்டு வந்த நடிகர் சங்கத்தில் நான் பொதுச் செயலாளராக இருப்பதற்கு அவருடைய உழைப்பும், தைரியமும் தான் காரணம்.

சட்டமன்றமாக இருந்தாலும் சரி, திரைப்படம் ஆனாலும் சரி எல்லா வகையில் மனதில் இடம்பெற்றவர். மதுரை பகுதிகளில் என் படத்தின் படப்பிடிப்பு நடக்கும் போது அங்கிருக்கும் பெரியவர்கள் விஜயகாந்த் பட ஷூட்டிங்கின் போது அவருடைய குணத்தை பற்றி இப்போதும் பேசுவார்கள்.

அவர் உயிருடன் இருந்திருந்தால் அவரிடம் நான் சொல்லும் ஒரு வார்த்தை இதுதான். 'என்னை மன்னிச்சிடு சாமி' அவ்வளவுதான். நான் அவரது இறுதிச் சடங்கில் அவருடன் இருந்து அவருடைய முகத்தை பார்த்திருக்க வேண்டும். அவருடைய குடும்பத்துக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று விஷால் பேசினார்.

# பொங்கல் ரேஸில் இருந்து பின்வாங்கிய 'லால் சலாம்' – புதிய ரிலீஸ் தேதி அறிவிப்பு

**சென்னை : ஜன. 10,**

**நடிகர் ரஜினிகாந்த் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க, அவரின் மூத்த மகள் ஐஸ்வர்யா இயக்கியுள்ள 'லால் சலாம்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.**



நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா இயக்கியுள்ள படம், 'லால் சலாம்'. இந்தப் படத்தில் 'மொய்தீன் பாய்' என்ற கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் கவுரவ வேடத்தில் நடித்துள்ளார். விக்ராந்த், விஷ்ணு விஷால் இருவரும் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். இப்படத்தில் ஒரு சிறப்பு தோற்றத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கபில் தேவ் நடித்துள்ளார். லைகா சார்பில் சுபாஷ்கரன் படத்தை தயாரித்துள்ளார். ரெட் ஜெயன்ட் நிறுவனம் தமிழகத்தில் படத்தை வெளியிடுகிறது. இப்படம் வரும் பொங்கல் பண்டிகைக்கு திரையரங்குகளில் வெளியாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. இப்போது, பொங்கல் ரேஸில் இருந்து பின்வாங்கியது இப்படம்.

லைகா நிறுவனத்தின் 'மிஷன் சாப்டர்' படம் பொங்கலுக்கு வெளியாகவுள்ளதால், அதே நிறுவனம் தயாரித்துள்ள லால் சலாம் படத்தின் வெளியீடு தள்ளிவைக்கப்பட்டது. அதன்படி, தற்போது இப்படத்தின் புதிய ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பிப்ரவரி 9-ம் தேதி படம் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

# கீர்த்தி சுரேஷின் தந்தைக்கு பாஜகவில் முக்கிய பொறுப்பு

**கேரளா : ஜன. 10,**

**கேரளத்தைச் சேர்ந்த நடிகை கீர்த்தி சுரேஷின் தந்தை சுரேஷ்குமாருக்கு பாஜக மாநிலக்குழுவில் இடம் வழங்கப்பட்டுள்ளது.**



இது என்ன மாயம்' என்ற படத்தின் முலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் கீர்த்தி சுரேஷ், அதனைத் தொடர்ந்து விஜய், சூர்யா உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்த அவர், சமீபத்தில் தெலுங்கில் வெளியான 'தசரா' படத்தில் நடித்திருந்தார். தமிழில் மாரி செல்வராஜ் இயக்கத்தில் 'மாமன்னன்' படத்தில் உதயநிதியுடன் இணைந்து நடித்துள்ளார். தற்போது மேலும் நான்கு திரைப்படங்கள் நடித்து வருகிறார் கீர்த்தி.

அவரது தந்தை சுரேஷ்குமார் கேரளாவில் சிறந்த நடிகராகவும் திரைப்பட தயாரிப்பாளராகவும் விளங்கி வருகிறார். துணிச்சலாக மனதில் பட்டதை பொதுவெளியில் பேசக்கூடியவராகவும் அவர் அறியப்படுகிறார். நடிகர் திலீப் குமார் விவவாரம் பெரிதாக எழுந்தபோது கேரளா திரையுலகை கிரிமினல் ஆக்க சதி நடப்பதாக விமர்சித்து திலீப் குமாருக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர்களில் சுரேஷ்குமாரும் ஒருவர்.

மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பாஜக தலைமை ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் செல்வாக்குள்ள முக்கியமான பிரபலங்களை பாஜகவில் இணைத்து வருகிறது. கேரளாவில் அக்கட்சிக்கு அதிக வலு இல்லாத நிலையில் அங்கு திரையுலகை சேர்ந்தவர்களை தொடர்ந்து பாஜகவில் இணைத்து வருகிறது.

நடிகரும், இயக்குநருமான மேஜர் ரவி, நடிகர்கள் தேவன், சுரேஷ் கோபி உள்ளிட்ட பலர் பாஜகவில் முக்கிய பொறுப்புகளில் உள்ளனர். தற்போது அந்த வரிசையில் திரைப்பட தயாரிப்பாளரும், நடிகருமான நடிகை கீர்த்திசுரேஷின் தந்தை சுரேஷ் குமார், பாஜகவில் இணைக்கப்பட்டு கேரள மாநிலக் குழுவிலும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் பலருக்கும் முக்கிய பொறுப்புகளை பாஜக தலைமை அளித்து வருகிறது. அந்தவகையில் தான் சுரேஷ் குமாருக்கு பாஜக மாநிலக் குழுவில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் திருச்சூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட நடிகர் சுரேஷ் கோபிக்கு வாய்ப்பு வழங்கப்படும் என தெரிகிறது.

# நடிகர் சூர்யாவுடன் ஜோடி சேரும் அதிதி



**சென்னை : ஜன. 10,**

**நடிகை அதிதி ஷங்கர், நடிகர் சூர்யாவுடன் ஜோடி சேர இருக்கிறார் என்ற செய்தி ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.**

'விருமன்' படத்தில் நடிகர் கார்த்தி ஜோடியாக அறிமுகமானார் நடிகை அதிதி ஷங்கர். முதல் படத்திலேயே தனது துள்ளலான நடிப்பாலும், நடனத்தாலும் ரசிகர்களைக் கவர்ந்தார். நடிப்பு, நடனம் மட்டுமல்லாது பாடகியாகவும் தம்ப்ஸ் அப் வாங்கினார் அதிதி. அடுத்து, சிவகார்த்திகேயன் ஜோடியாக 'மாவீரன்' படத்தில் நடித்திருந்த அதிதி, தற்போது, விஷ்ணு வர்தன் இயக்கத்தில் அதர்வா தம்பி ஆகாஷ் முரளி கதாநாயகனாக அறிமுகமாகும் புதிய படம் ஒன்றில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் அவர் சூர்யாவுக்கு ஜோடியாகப் போகிறார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.


'விருமன்' வந்த சமயத்திலேயே அடுத்து சூர்யாவுக்கு ஜோடியா என அதிதியிடம் கேட்கப்பட்டது. இப்போது அது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. 'கங்குவா' படத்திற்கு அடுத்து இயக்குநர் சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிப்பது முன்பே அறிவிக்கப்பட்டத் தகவல் தான். இந்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிகை அதிதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இந்த படத்தில் சூர்யாவுடன் துல்கர் சல்மான், விஜய் வர்மா ஆகியோரும் நடிக்கிறார்கள். 'கங்குவா', 'வாடிவாசல்' படத்திற்கு அடுத்து சுதா கொங்கரா படத்தில் சூர்யா நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிலதிபருடன் ரகசிய திருமணமா? – நடிகை அஞ்சலி மறுப்பு

**சென்னை : ஜன. 10,**

**நடிகை அஞ்சலி, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழிப் படங்களில் நடித்து வருகிறார். தமிழில் அவர் நடித்துள்ள 'ஏழு கடல் ஏழு மலை' விரைவில் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில், திருமண வதந்திகள் பற்றிப் பேசியுள்ளார்.**

அதில், "சினிமாவில் எனக்கு அதிகமான நண்பர்கள் இருக்கிறார்கள். என்னைப்பற்றி யாருடன் இணைத்து எழுத வேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்து எழுதுகிறார்கள். முதலில், நடிகர் ஜெய்யை காதலித்ததாகச் செய்தி வந்தது. பிறகு தொழிலதிபர் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு அமெரிக்காவில் செட்டில் ஆகிவிட்டதாகச் சொன்னார்கள். எனக்கே தெரியாமல் எனக்குத் திருமணம் ஆனதை நினைத்துச்



சிரித்துக் கொண்டேன். நடிகை என்பதால் இஷ்டம் போல் இப்படி எழுதுகிறார்கள்" என்று வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.



வரலாறு உலகம்

# ஜப்பானில் 6.0 ரிக்டரில் நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை



**டோக்கியோ : ஜன. 10,**
**ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இதன் தாக்கம் 6.0 ஆகப் பதிவானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.**

முன்னதாக கடந்த ஜனவரி 1, புத்தாண்டு தினத்தில் ஜப்பானில் 7.6 ரிக்டரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. கூடவே 120-க்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் பதிவாகின. இதில் 202 பேர் உயிரிழந்தனர். 565 பேர் காயமடைந்தனர். நிலநடுக்கத்தில் பல்வேறு கட்டுமானங்கள் சேதமடைந்தனர். 23 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். ஹொகரிகு பகுதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடுமையானப் பனிப்பொழிவு நிலவுவதால் இதுநாள் வரை மீட்புப் பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள இயலவில்லை. வீடுகளை இழந்த பலரும் நிவாரண முகாம்களிலேயே முடங்கியுள்ளனர். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம், குடிநீர் விநியோகம் ஆகியனவற்றை சீரமைக்க முடியவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஜன.1 நிலநடுக்கம் மிகப் பெரிய சவாலாக அமைந்துள்ளதாக அந்நாட்டு சூழலியல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், ஜப்பானில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 6.0 ஆக பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கமும் மத்திய ஜப்பானிலேயே பதிவாகியுள்ளது. இதனால் கடந்த 1-ஆம் தேதி எந்தெந்த பகுதிகளிலும் பாதிப்பு உணரப்பட்டதோ அதே பகுதிகளிலேயே மீண்டும் பாதிப்பு உணரப்பட்டுள்ளது. இருப்பினும் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.

ஜப்பான் உலகில் நிலநடுக்கத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாகும், ஏனெனில், ஜப்பான் நாடு நான்கு ஒன்றிணைந்த டெக்டானிக் பெருந்தாங்கு பாறைகளின் மேல் அமர்ந்திருக்கிறது. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்ந்து பெரிய அளவில் உராய்வுகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 நிலநடுக்கங்கள் ஜப்பான் நாட்டைத் தாக்குகின்றன. இருப்பினும், பெரும்பாலானவை உணர முடியாத அளவுக்கு மிதமானவைகளே.

இந்த ஆண்டு தொடக்கத்திலேயே ஏற்பட்ட நிலநடுக்கம் பெரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. அப்போதே அடுத்த சில வாரங்களுக்கு நிலநடுக்க அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறிய நிலையில் இன்று மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலநடுக்க சேத விவரங்கள் பற்றிய மேலதிக தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

# இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி கொலை



**இஸ்ரேல் : ஜன. 10,**
**இஸ்ரேல் மீது கடந்த அக்டோபர் மாதம் ஹமாஸ் பயங்கரவாதிகள் பயங்கர தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வகையில் காசா மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதலை தொடங்கியது. மூன்று மாதங்களை கடந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.**

காசா மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹமாஸ்க்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலும் லெபனான் தெற்குப் பகுதியை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை சொகுசு காரில் சென்ற ஹிஸ்புல்லாவின் முக்கிய தளபதியை குறிவைத்து இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஹிஸ்புல்லா தளபதி விஸ்ஸாம் அல்-டவில் உயிரிழந்ததாக லெபனான் தெரிவித்துள்ளது. லெபனானின் தெற்குப் பகுதியில் ரகசியமாக செயல்பட்டு வந்த ஹிஸ்புல்லா குழுவின் தளபதியாக செயல்பட்டு வந்த நிலையில் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இது ஹிஸ்புல்லா அமைப்பிற்கு ஆத்திரமூட்டும் என்பதில் சந்தேகமில்லை. ஹிஸ்புல்லாவும் பதிலடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல்-ஹிஸ்புல்லா இடையே போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இஸ்ரேல்-காசா இடையிலான சண்டை மத்திய கிழக்கு போராக விரிவடையும் என அச்சம் நிலவுகிறது. அக்டோபர் 7-ந் தேதி ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 1200 பேர் கொல்லப்பட்டனர். 240-க்கும் மேற்பட்டோர் பிணைக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். ஏழு நாள் போர் நிறுத்தம் ஏற்பட்டதன் காரணமாக சுமார் 100 பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 23 ஆயிரம் பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 23 லட்சம் மக்கள் தொகை கொண்ட காசாவில் இருந்து சுமார் 85 சதவீதம் பேர் தங்களது வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

# ‘காசா போரில் வடகொரியாவுக்கு என்ன வேலை’

## ஹமாஸ் ஆயுதங்களை முன்வைத்து தென்கொரியா புதிய குற்றச்சாட்டு



**காசா : ஜன. 10,**
**ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கைகளில் சீனாவின் ஆயுதங்கள் வந்தது எப்படி என்ற கேள்வியை இஸ்ரேல் எழுப்பியதன் சுவடு அடங்குவதற்குள், ஹமாஸ் வசம் வடகொரியாவின் ஆயுதங்கள் இருப்பதாக தென்கொரியா புதிய குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளது.**

அக்.7 ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலடியாக, காசாவில் இஸ்ரேல் தீவிரமாக வேட்டையாடி வருகிறது. 3 மாதங்களைக் கடந்த சூழலில் இஸ்ரேலின் முன்புள்ள பெரும் கேள்விகளில் ஒன்று, ஹமாஸின் புதிய ஆயுத பின்புலம் குறித்தானது. ஹமாஸ் போராளிகளின் வீரமும், தாக்குதல் உத்திகளும் அதிரடியானவை. ஆனால் இஸ்ரேலுடன் ஒப்பிடுகையில், அவர்கள் வசம் இருந்த ஆயுத தளவாடங்கள் அனைத்தும் அரதப்பழசானவை. ஆனால் அக்.7 அன்று இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை ஹமாஸ் தொடங்கியது முதல் தற்போது வரை ஹமாஸ் ஆயுத பலத்தின் பின்னணியில் பெரும் நாடுகள் இருப்பதாக இஸ்ரேல் சந்தேகித்து வந்தது.

காசா மீதான தரைவழித் தாக்குதலின்போது ஹமாஸ் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை ஆராய்ந்த பின்னரே, இஸ்ரேலின் நீண்ட ஐயத்துக்கு விடை புலப்பட்டது. ஆயுதங்களை விட இஸ்ரேலின் நகர்வுகளை மோப்பம் பிடிப்பதற்காக ஹமாஸ் பயன்படுத்திய உளவு - தகவல்தொடர்பு சாதனங்கள் அனைத்தும் சீனாவின் தயாரிப்புகளாக இருந்தன.

இஸ்ரேலுக்குஅமெரிக்கா போன்று, ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஈரான் சகல வகைகளிலும் ஆதரவளித்து வந்தது. ஹமாஸ் அமைப்பினருக்கான ஆயுதங்கள், மருந்துகள் மற்றும் உணவுகளோடு போர்ப்பயிற்சியையும் ஈரான் வழங்கி வந்தது. ஆனால் ஹமாஸ் வசமிருந்து தற்போது கைப்பற்றப்பட்டுள்ள ஆயுத தளவாடங்கள் மற்றும் உளவறியும் சாதனங்கள் ஆகியவை சீனாவின் தயாரிப்புகளாக இருப்பதை அறிந்து இஸ்ரேல் திடுக்கிட்டது.

அது குறித்து பகிரங்கமாகவும் இஸ்ரேல் கேள்வி எழுப்பியது. ஈரான் தேவைக்காக சீனா வழங்கிய ஆயுத தளவாடங்கள் ஹமாஸுக்கு வழங்கப்பட்டனவையா அல்லது சீனாவே நேரடியாக காஸா மீதான அக்கறையில், ஹமாஸுக்கு அவற்றை கையளித்திருக்கிறதா என்பது இஸ்ரேல் பார்வையில் இன்னமும் தெளிவாகவில்லை.

இவற்றின் மத்தியில் ஹமாஸின் ஆயுத பின்புலத்தை முன்வைத்து தென்கொரியா புதிய தகவலை வெளியிட்டுள்ளது. ஹமாஸ் வசமிருக்கும் ஆயுதங்கள் பலவும் வடகொரியத் தயாரிப்புகள் என குற்றம்சாட்டியுள்ளது. இதற்கான ஆதாரங்களை விரைவில் வெளியிடுவோம் எனவும் தென்கொரியா தெரிவித்துள்ளது. இதையே சில தினங்களுக்கு முன்னதாக, அமெரிக்காவின் அரசு ஊடகமாக 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக உக்ரைனும், தங்களுக்கு எதிரான ரஷ்யாவின் தாக்குதலில் வடகொரியாவின் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் உக்ரைன் மற்றும் தென்கொரியாவின் குற்றச்சாட்டுகளை வடகொரியா தற்போது வன்மையாக மறுத்துள்ளது. ”அசலான பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திருப்ப அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில் வடகொரியா மீது இந்த புகார்கள் சுமத்தப்படுகின்றன. மூன்றாம் நாட்டில் போரிடுவதும், பின்னிருந்து போர்களை இயக்குவதும் அமெரிக்காவின் பாணி” என்று அமெரிக்காவுக்கு எதிராக வடகொரியா கடுமையாக குற்றம்சாட்டியுள்ளது.

# குஜராத்தில் பிரதமர் மோடியுடன் திமோர் ஜனாதிபதி சந்திப்பு



**குஜராத் : ஜன. 10,**
**குஜராத்தில் பிரதமர் நரேந்திர மோடி திமோர் ஜனாதிபதி ஜோஸ் ராமோஸ் ஹோர்டாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது.**

குஜராத் மாநிலம், காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் வளாகத்தில் 10-ம் ஆண்டாக ‘துடிப்பான குஜராத் உலகளாவிய உச்சி மாநாடு 2024’ என்ற உலகாளவிய தொழில் துறை மாநாடு இன்று முதல் வரும் 12-ம் தேதி வரை 3 நாள்கள் நடைபெற உள்ளன.

இந்த மாநாட்டை தொடங்கி வைப்பது மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக குஜராத்துக்கு 2 நாள் பயணமாக பிரதமர் மோடி நேற்று முன்தினம் திங்கள்கிழமை இரவு அகமதாபாத் சென்றடைந்தார்.

இந்நிலையில், மாநாடு நடைபெறும் மகாத்மா மந்திர் வளாகத்துக்கு பிரதமர் மோடி நேற்று காலை வந்தார். அங்கு, தென் கிழக்கு ஆசிய நாடான திமோர் நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் ராமோஸ் ஹோர்டா-வை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பானது, இரு நாடுகளிடையே சுகாதாரம், பாரம்பரிய மருத்துவம், எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், ஃபின்டெக் மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை உள்ளடக்கிய விவாதங்களுக்கு வழிவகுப்பதாக அமைந்தது.

இதேபோல் பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களும் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசி வருகின்றனர். நேற்று மாலை 3 மணி அளவில் நடைபெற்ற நிகழ்வில் மாநாட்டின் வர்த்தக காட்சியை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து, மாலையில் இந்தியா வந்த, ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை, பிரதமர் மோடி வரவேற்றார். அதன்பிறகு இருவரும் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்துக்கு வெளியே சாலையில் 3 கி.மீ. தூரம் ஊர்வலமாக சென்றனர்.

இன்று காலை, ‘துடிப்பான குஜராத் உலகளாவிய உச்சி மாநாடு 2024’ மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து, உலகளாவிய முன்னணி நிறுவனங்களின் முதன்மை செயல் அலுவலருடன் பிரதமர் ஆலோசனை கூட்டம் நடத்த உள்ளார். இந்த தொழில் துறை உச்சி மாநாட்டில் 34 பங்குதாரர் நாடுகள் மற்றும் 16 பங்குதாரர் அமைப்புகள் கலந்துகொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “எங்களின் ஆபத்பாந்தவன்” : இந்தியாவுடனான பழைய உறவுகளை நினைவுகூர்ந்த மாலத்தீவு முன்னாள் அமைச்சர்



**மாலே : ஜன. 10,**
**பிரதமர் நரேந்திர மோடி குறித்த தரக்குறைவான கருத்துகள் மாலத்தீவு அரசின் குறுகிய பார்வையை வெளிப்படுத்துவதாக அந்நாட்டு முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் மரியா அகமது திதி தெரிவித்துள்ளார். மேலும், இந்தியா எங்களுக்கு தேவைப்படும் காலங்களில் வந்து உதவும் ‘911’ அவசர எண் போன்ற ஆபத்பாந்தவன் என்றும் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து மாலத்தீவு முன்னாள் அமைச்சர் மரியா அகமது திதி இந்தியாவுடனான முந்தைய நட்பை நினைவுகூர்கையில், “பிரதமர் மோடி மீதான விமர்சனங்கள் தற்போதைய மாலத்தீவு அரசாங்கத்தின் குறுகியப் பார்வையை வெளிப்படுத்துகிறது. மாலத்தீவு அனைவருடனும் நட்புணர்வுடன் இருக்கும் ஒரு சிறிய நாடு. இந்தியாவுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறோம் என்பதை நாம் மறுக்க முடியாது. அதேபோல் பாதுகாப்பு விவகாரங்களிலும் தொடர்பில் இருக்கிறோம். அவர்கள்பாதுகாப்புத்துறையில் நமக்கு உதவுகிறார்கள், ராணுவத் தளவாடங்களை வழங்குகிறார்கள், பாதுகாப்புத்துறையில்நாங்கள் தன்னிறைவு பெற உதவி வருகிறார்கள். இந்தியாவுடன் எப்போதும் பேணி வரும் பழைய உறவுகளை தற்போது பேண முடியாது என்று நினைப்பது தற்போதிருக்கும் அரசின்குறுகியபார்வையையே காட்டுகிறது.

இந்தியா எங்களுடைய அவசர கால ஆபத்பாந்தவன். எங்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் நாங்கள் அவர்களை அழைக்கிறோம். அவர்களும் வந்து எங்களைக் காக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தியா எங்களின் அவசரகால நண்பன். நண்பர்களைப் பற்றி இதுபோன்ற கருத்துக்களைக் கூறுவது அனைவருக்கும் வருத்தமளிப்பதாக உள்ளது.

நெருங்கிய நண்பர்களாக, அண்டை நாடாக, சர்வதேச சமூகத்தின் அங்கமாக நாம் சர்வதேச கடமைகளை கடைபிடிப்போம். எல்லோருடனும் நட்பு கொள்ளும் நமது பாரம்பரிய வெளியுறவுக் கொள்கைகளை கடைபிடிப்போம். இந்தியாவே நமக்கு முதன்மையான நட்பு நாடு. இப்போதைய அரசும் இதையே செய்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

சில நோய்களுக்கான சிகிச்சைகளுக்கான வசதி எங்களிடம் இல்லை. கோவிட் கால கட்டத்தில் இந்தியாவின் உதவியின் கீழ் நாங்கள் தடுப்பூசிகளைப் பெற்றோம். இருநாடுகளுக்குமிடையிலும் பெரிய அளவில் ஒத்துழைப்பு உள்ளது. பழங்காலத்தில் இருந்தே ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு அளித்து வருகிறோம். இப்போது நமது நட்பு நாட்டை மாற்றுவது என்ற எண்ணத்தை நினைத்துப் பார்க்க முடியாது.

பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக தீவில் இருந்து எங்கள் மக்களை மாலேக்கு கொண்டுவருவதற்கு இந்தியா வழங்கியுள்ள தொழில்நுட்ப உதவிமுற்றிலும்மனிதாபிமான அடிப்படையிலானது. மாலத்தீவுக்கு இந்தியா அளித்துள்ள உபகரணங்கள் எங்களுக்கு எப்போதும் உதவியாகஇருக்கும்”.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2-ம் தேதி அரசு முறை பயணமாக லட்சத் தீவு சென்றிருந்தார். அப்போது அங்குள்ள கடற்கையில்எடுத்துக்கொண்ட சில புகைப்படங்கள் மற்றும் வீடியோவை அவர்சமூக வலைதளங்களில் பகிர்ந்தார். அத்துடன் “சுற்றுலா செல்ல விரும்புவோருக்கு லட்சத்தீவு மிகச் சிறந்த இடம்” என்று பதிவிட்டிருந்தார்.

இந்த பதிவு சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. பிரதமரின் பயணம் காரணமாகஇரண்டுநாட்களாக கூகுளில் அதிகம் தேடப்பட்ட வார்த்தையாக லட்சத் தீவு தொடர்ந்து முதலிடத்தில் இருந்தது. இந்நிலையில் மாலத்தீவுதுணைஅமைச்சர்கள் மரியம்ஷியுனா, அப்துல்லா மஹ்சூம்மஜித்,மால்ஷாஷெரீப் ஆகியோர்பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை சமூக வலைதளங்களில் பதிவிட்டனர். குறிப்பாக, மாலத்தீவுக்கு மாற்றாக லட்சத்தீவை மிகப்பெரிய சுற்றுலாதலமாகமாற்றபிரதமர் மோடி முயற்சி செய்கிறார் என்று குற்றம்சாட்டினர். இந்த விவகாரம்குறித்துமாலத்தீவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள்ஞாயிற்றுக்கிழமை அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின்கவனத்துக்கு எடுத்துச் சென்றனர்.

இதனிடையே, இந்த கருத்துகளுக்கு சமூக வலைதளங்களில் கடும் கண்டனம் தெரிவித்த இந்தியாவின் முக்கிய பிரபலங்கள், மாலத்தீவுக்கு சுற்றுலா செல்வதற்கு பதில் உள்நாட்டில் உள்ள மாற்று இடங்களை பரிசீலிக்க வேண்டும் என்று இந்தியர்களுக்கு கோரிக்கை வைத்தனர். இதனால் ஏற்கெனவே மாலத்தீவு செல்ல திட்டமிட்டிருந்த ஆயிரக்கணக்கானோர் தங்கள் விமானடிக்கெட் மற்றும்ஓட்டல் அறை முன்பதிவுகளை ரத்து செய்தனர்.

இதையடுத்து, “வெளிநாட்டு தலைவர்கள் மீது அமைச்சர்கள் தெரிவித்த கருத்துக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவை அவர்களின் தனிப்பட்ட கருத்து” என மாலத்தீவு அரசு சார்பில் ஞாயிற்றுக்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டது. அத்துடன் 3 மாலத்தீவு அமைச்சர்களின் பதவியும் தற்காலிகமாக பறிக்கப்பட்டது.

# பிரேசிலில் லாரி மீது சுற்றுலா பேருந்து மோதி விபத்து : 25 பேர் பலி



**பிரேசிலியா : ஜன. 10,**
**பிரேசிலில் லாரி மீது சுற்றுலா பேருந்து மோதிய விபத்தில் 25 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

பிரேசிலின் வடகிழக்கு மாநிலமான பாஹியாவில் உள்ள நோவா பாத்திமா - கவியாவோ நகரங்களுக்கு இடையிலான ஃபெடரல் சாலையில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற சுற்றுலாபேருந்தும் (மினிபஸ்), லாரியும் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் சுமார் 25 பேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் பலியானவர்களில் பெரும்பாலோர் மினி பஸ்ஸில் இருந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 25 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஜாக்கோபினா நகராட்சி மூன்று நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் ஒன்றை ஒன்றைமுந்திச்செல்லும்போது விபத்துஏற்பட்டிருக்கலாம் என போலீஸார் சந்தேகிக்கின்றனர். விபத்துக்கான காரணம் என்பது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிரான்ஸ் பிரதமர் திடீர் ராஜினாமா



**பிரான்ஸ் : ஜன. 10,**
**பிரான்ஸ் நாட்டு பிரதமர் எலிசபெத் போர்ன் திடீரென தன்னுடைய பதவியை ராஜினாமாசெய்துள்ளார்.புதிய பிரதமர் நியமிக்கப்படும் வரை, எலிசபெத் போர்ன் அன்றாட உள்நாட்டு பிரச்சினைகளை தொடர்ந்துகவனித்துவருவார் என்று அதிபர் மாளிகை அறிவித்துள்ளது.**


ஐரோப்பிய நாடுகளில் மிகவும் முக்கியமானது பிரான்ஸ்.இங்குஇம்மானுவேல் மக்ரோன் அதிபராக இருந்து வருகிறார். எலிசபெத் போர்ன் பிரதமராக இருந்து வந்தார். பிரான்ஸில் இன்னும் ஒருசில மாதங்களில் நாடாளுமன்ற தேர்தல் நடக்க இருக்கிறது.

இந்த நிலையில், இம்மானுவேல் மக்ரோன் அமைச்சரவையில் சில மாற்றங்களை அதிபர் செய்யப் போவதாக தகவல் வெளியானபடி இருந்தது. இந்நிலையில், பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்ன் தன்னுடையபதவியைதிடீரென ராஜினாமாசெய்து,பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

இவர், பிரதமராகி 2 ஆண்டுகள் கூட ஆகவில்லை. இம்மானுவேல் மக்ரோன் இரண்டாவது முறையாக மீண்டும் பிரான்ஸ் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கடந்த மே 2022-ல் எலிசபெத் போர்ன் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

தற்போது பிரதமர் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்துள்ள நிலையில் புதிய பிரதமர் யார் என்பது தொடர்பாக, எந்தவித அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை. அதே சமயம், புதிய பிரதமர் நியமிக்கப்படும் வரை எலிசபெத் போர்ன் அன்றாட உள்நாட்டு பிரச்சினைகளை தொடர்ந்து கவனித்து வருவார் என, அதிபர் மாளிகை அறிவித்துள்ளது.

# வெள்ளை மாளிகையில் மோதிய கார் சதிச்செயல் காரணமா என்று தீவிர விசாரணை



**அமெரிக்கா : ஜன. 10,**
**அமெரிக்க வெள்ளை மாளிகை நுழைவு வாயிலின் மீது கார் பயங்கரமாக மோதிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது விபத்தா அல்லது சதிச்செயல் காரணமா என டிரைவரிடம் அதிகாரிகள் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.**

அமெரிக்கா அதிபர் ஜோ பைடன் வசிக்கும் வெள்ளை மாளிகையானது உச்சக்கட்ட பாதுகாப்புஅம்சம்கொண்டுள்ள கட்டடமாகும். அங்கு 24 மணி நேரமும்போலீஸார்பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பாதுகாப்பு வளையத்தை மீறி நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை கார் ஒன்று வெள்ளை மாளிகையை நோக்கி வந்துள்ளது. பின்னர், யாரும் எதிர்பாராத விதமாக திடீரென வெள்ளைமாளிகைவெளிப்புற நுழைவு வாயிலின் மீது அந்த கார் பயங்கரமாக மோதியது.

இதைக் கண்டதும் பாதுகாப்பு பணியில் இருந்த அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு, காரை ஓட்டி வந்த ஆசாமியைமடக்கிப்பிடித்தனர். இந்த சம்பவம் நடந்தபோது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் இல்லை. அவர் வெளியூரில் சுற்றுப்பயணத்தில் இருந்தார்.

எனவே, இது தற்செயலாக நடந்த விபத்தா அல்லது சதிச்செயலில் ஈடுபடும் நோக்கத்தில்கார்மோதப்பட்டதா என்பது குறித்து, அதிகாரிகள் டிரைவரிடம் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.இந்தசம்பவத்தை தொடர்ந்து வெள்ளை மாளிகையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# ஈராக் மருத்துவமனை தீ விபத்து : 4 குழந்தைகள் பலி


**பாக்தாத் : ஜன. 10,**
**அலட்சியமாக இருந்த மருத்துவமனை அதிகாரிகளை பணிநீக்கம் செய்யும்படி ஈராக் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.**

ஈராக்கின் தெற்கு பகுதியில் உள்ள திவானியா நகரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் சிறப்பு மருத்துவமனைஉள்ளது.இந்த மருத்துவமனையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை தீ விபத்து ஏற்பட்டது. மருத்துவமனையின் ஒரு பகுதியில் பற்றிய தீ, அடுத்தடுத்த அறைகளுக்கும் வேகமாக பரவியது. இதனால் அங்கிருந்தவர்கள் அலறியடித்து வெளியேறினர். தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். சிலர் தீப்பிடித்த கட்டிடத்திற்குள் சிக்கிக்கொண்டனர்.

இந்த விபத்தில் 4 குழந்தைகள் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு பாதிக்கப்பட்டனர். மருத்துவமனையில் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டிருந்த 150 நோயாளிகள் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

மின்கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் அலட்சியமாக இருந்த மருத்துவமனை அதிகாரிகளை பணிநீக்கம் செய்யும்படி ஈராக் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

# தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் 95.6% பேருந்துகள் இயக்கம் அரசு தகவல்





# கறம்பக்குடி; அரசால் தடைசெய்யப்பட்ட குட்கா விற்பனை மூன்று கடைகளுக்கு சீல்

# சிறை தண்டனைக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கு : ராஜேஷ் தாஸ் மனு தள்ளுபடி




சென்னை / புதுக்கோட்டை | 10.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று




## இன்றைய பிறந்த நாள்

இரண்டாம் பாஜி ராவ், மராத்திய பேரரசின் கடைசித் தலைமை அமைச்சர் (பி.1775) (இ.1851)



பாலி சாம் நரிமன், இந்திய சட்ட அறிஞர் (பி.1929)



ஆர். சூடாமணி, தமிழகப் பெண் எழுத்தாளர் (பி.1931) (இ.2010)



கி. கஸ்தூரிரங்கன், தமிழக இதழாளர், எழுத்தாளர் (பி.1933) (இ.2011)



## இன்றைய நினைவு நாள்

தமிழக இதழாளர், எழுத்தாளர், தமிழில் நாட்குறிப்பு எழுதியவர் (பி.1709) (இ.1761)



ஸ்ட்ரிங்கர் லாரன்ஸ், பிரித்தானிய இந்தியாவின் முதற் பெரும் படைத்தலைவர் (பி.1697) (இ.1775 )



சம்பூர்ணாநந்தர், இராஜஸ்தானின் 2வது ஆளுநர் (பி.1891) (இ.1969)



எஸ். சர்வானந்தா, இலங்கை நீதிபதி, மேல்மாகாணத்தின் 1வது ஆளுநர் (பி.1923) (இ.2007)

